விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9436)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 26 திங்கட்கிழமை (09.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 81

## சுமந்திரன் கூறும் வேட்பாளர் வேண்டாம் தமிழரசு மகளிர் அணிகள் போர்க்கொடி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறும் பெண் வேட்பாளரை தாம் ஒரு போதும் ஏற்க மாட்டோம் என யாழ். மற்றும் கொழும்புக் கிளை மகளிர் அணியினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வை முடித்துவிட்டு தமிழரசுக் கட்சி அலுவலகத்துக்கு சென்ற பெண்கள் மேற்கண்டவாறு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை உப தலைவி மிதிலைச் செல்வி, தமிழரசுக் கட்சி மகளிர் அணியானது கட்சியின் தலைவர்களால் உரிய கட்டுக்கோப்புடன் வளர்க்கப்பட்ட அணியாகச் செயற்பட்டு வருகிறது. 23

ஐ.தே.கவின் கதவு திறந்தே உள்ளது

## சஜித் பிரேமதாஸவுக்கு ரணில் தரப்பு அழைப்பு

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினருக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் கதவு திறந்தே காணப்படுவதாக அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ரணில் தரப்பு ஆதரவாளருமான ருவன் 23

கோட்டா அரசே கொண்டு போனவர்கள் எங்கே?

# ஐ.நாவே! இலங்கை அரசை குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து

## காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் கண்ணீரில் நனைந்தது முல்லை மண்

*(முல்லைத்தீவு)*

ஜனாதிபதி எங்கள் உறவுகளை உயிருடன் மண்ணுக்குள் புதைத்தாரா? கோட்டா அரசே நீ கொண்டு போனவர்கள் எங்கே? எனக் கேள்வி எழுப்பிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், இலங்கை அரசை சர்வதே குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த ஐ.நா நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

*(3ஆம் 10ஆம் பக்கம் பார்க்க)*



## ஹெரோயினுடன் யாழில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

440 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 பேரை நேற்று கைது செய்ததாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நாவாந்துறைப் பகுதியில் போதைப்பொருள் பாவனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற 23

## ஆலயத்தில் திருட்டு!

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டது. துவிச்சக்கர வண்டியில் வந்த இருவரே இவ்வாறு திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதி 23

கட்டுப்பாட்டையிழந்து கடைக்குள் புகுந்த

## உழவு இயந்திரம் மோதி வயோதிபர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணியில் உழவு இயந்திரம் மோதி வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் 23

## இணைந்து செயற்பட்டால் மாத்திரமே பொதுத் தேர்தலில் பெரும்பான்மை

எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் இணைந்து செயற்பட்டதைப் போன்று இணக்கமாக செயற்பட்டால் மாத்திரமே பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களை பெற்று பலமான அரசாங்கத்தை ஸ்தாபிக்க 23

## தேர்தலுக்கு முன்னர் சொத்து விபரங்களை வெளியிடக் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் பொதுமக்கள் மத்தியில் நன்மதிப்பை பெறுவதற்கும் பொறுப்புக்கூறலை நிலைநாட்டு வதற்கும் தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்துமாறு ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் கோரிக்கை விடுத்தது.

இதன்மூலம் மக்கள் பிரதிநிதிகள் தாம் ஊழலுக்கு எதிரான அர்ப்பணிப்புள்ளவர்கள் என்பதையும் மிக வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறுபவர்கள் என்பதையும் மக்களுக்கு தெரியப்படுத்த முடியும் என்றும் குறித்த நிறுவனம் சுட்டிக்காட்டியது. 23

## அரசியலிலிருந்து ஆண்களை அகற்ற பெண்களால் முடியும் – சுமந்திரன்

(சாவகச்சேரி)

அரசியலில் பெண்களின் சம பங்களிப்பு இருந்திருக்குமானால் இன்று அரசியலின் முகம் வித்தியாசமானதாக, விரும்பத்தக்கதாக இருந்திருக்கும் என ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற மகளிர் தின 23

## யானை அல்லது அன்னம் எந்த சிக்கலும் இல்லை

ஐ.தே.க திட்டவட்டம்

(கண்டி)

யானை அல்லது அன்னம் சின்னத்தில் போட்டியிடுவதில் எவ்வித சட்ட சிக்கலும் எனத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரி 23

## பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இலங்கையில் அதிகரித்து வருகிறது

சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

(லண்டன்)

சர்வதேச மகளிர் தினம் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகமாகவுள்ளதாக சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு முதல் 15 நாட்களில் மாத்திரம் இலங்கையில் 142 பாலியல் வன்புணர்வு சம்பவங்கள், 42 கடுமையான பாலியல் துஷ்பிர 23

## பொக்கற் ராஜா பொலிஸாரிடம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக குற்றம் சாட்டப்படும் கிளிநொச்சி இளைஞன் பொலிஸாரிடம் வசமாக சிக்கினான்.

தொலைபேசி திருட்டு 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழர் தாயகத்தில் சமஷ்டி ரீதியாக தன்னாட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் விடாப்பிடி



(யாழ்ப்பாணம்)

**வடக்கு - கிழக்கு மக்களிடையே அரசியல், சமூக, பொருளாதார முன்னேற்றங்களை சமாந்திரமாகக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே எமது குறிக்கோள். அரசியலிலே எமது தன்னாட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும். வடக்கு - கிழக்கு இணைவு மற்றும் தமிழர் தாயகத்தில் தன்னாட்சியானது சமஷ்டி ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்பு என வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

தமிழ் மக்கள் கூட்டணியின் மக்கள் சந்திப்பு நிகழ்வு கரணவாய் மேற்கு. அந்தரன் குடியிருப்பில் நேற்று மாலை இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

வட கிழக்கு மக்களிடையே அரசியல், சமூக. பொருளாதார முன்னேற்றங்களை சமாந்திரமாகக் கொண்டு செல்லவேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

அரசியலிலே எமது தன்னாட்சி உறுதிப் படுத்தப்படவேண்டும். வடகிழக்கு இணைவு மற்றும் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி யானது சமஷ்டி ரீதியாக உத்தரவாதப் படுத்தப் படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இதற்குக் காரணம் உண்டு. பலர் கிழக்கைப் பற்றிப்பேசிஅங்குசிங்கள. முஸ்லிம் பெரும் பான்மையினர் மத்தியில் எவ்வாறு வட கிழக்கு இணைப்பைஉறுதிப்படுத்தப் போகின்றீர்கள் என்று கேட்கின்றார்கள். அதனால் வடகிழக்கு இணைப்பை விட்டு விடக் கோருகின்றார்கள். முஸ்லிம் மக்கள் தமிழ் பேசுகின்றவர்கள். வடகிழக்குதமிழ் பேசும் பிராந்தியங்கள் கிழக்கிலும் தமிழ் மொழிபேசுவோரே பெரும்பான்மையினர். ஆகவே தமிழ் பேசும் பிராந்தியங்களை இணைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கு இஸ்லாமிய அலகொன்றை வட கிழக்கினுள் உறுதி செய்வதில்தவறு ஏதும்இருக்க முடியாது.

1987ம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் வடகிழக்கு இணைப்பு இடம் பெற்றது. 18 வருடகாலமாக வடக்கும் கிழக்கும் இணைந்தே செயற்பட்டன. ஆகவே வடகிழக்கு இணைப்பு நடைமுறைச் சாத்தியமாகாது என்று கூறுவதுதவறு. வடக்கும் கிழக்கும் இணையாவிட்டால் பெரும் பான்மை அரசாங்கங்கள் வடக்கையும் கிழக்கையும் பிரித்து சிங்களக்குடியேற்றங்களை அங்கு உறுதிசெய்து விடுவார்கள். பின்னர் தமிழ்பேசும் மக்களை வடகிழக்கில் சிறு பான்மையினர் ஆக்கிசுமார் கால் நூற்றாண்டு காலத்தில் தமிழ்ப்பேசும் மக்களின் குடியிருப்புக்களைக் கபளீகரம் செய்துவிடுவார்கள். தற்பொழுதும் எம் மக்கள் வெளி நாடுகளுக்கு செல்லவே குறிக்கோளாக இருக்கின்றார்கள். எமக்கு உபத்திரவந் தந்தால் நாங்கள் வெளிநாடுகளுக்கு ஓடிப் போய்விடுவோம் என்ற தொருகருத்து சிங்கள அரசியல்வாதிகளிடம் உண்டு. இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம் சகோதரர்கள் மொழிக்காகப் போராடுவார்களா அல்லது தமது மதத்திற்காகப் போராடுவார்களா என்பது கேள்விக்குறியாகிவிடும். ஆகவேவடகிழக்கு இணைப்பானது தமிழ் மொழிபேசும் அனைவரும் தமது இருப்புக்களை உறுதிசெய்ய அத்தியாவசியமாகி விடுகிறது. எம்மை நாமே ஆளவேண்டிய ஒருகடப்பாடும் எமக்குண்டு. எம்மைநாம் ஆளநடவடிக்கை எடுக்காவிட்டால் எமது வளங்கள் யாவும் வெளிமாகாணமக்களின் கைவசம் அகப்பட்டுக் கொண்டுவிடுவன.

இந்தஅரசாங்கம் வந்தவுடன் ஒருசட்டம் கொண்டுவந்தது. மண் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பொலிஸாரால் அனுமதிப் பத்திரத்திற்காக தடுத்து வைக்கப்படாது என்று. அதாவது அவ்வாறான அனுமதிப்பத்திரங்கள் வாபஸ்பெறப்பட்டன. இப்பொழுது எமது மாகாண மண். வெளி மாகாணங்களுக்கு பெருவாரியாகச் சென்று கொண்டிருக்கின்றன. ஒட்டுசுட்டானில் கருங்கல் பாறைகள் உடைக்கப்பட்டு ஏற்கனவே கருங்கல் பெருவாரியாக வெளியே அனுப்பப்பட்டுவிட்டன. இப்போது கிழக்குக் கரையோரங்களில் இருக்கும் இல்மனைட் என்ற டைட்டானியம் உலோக மூலம் கலந்ததனிமங்கள் கடத்திச் செல்லப்படுகின்றன. டைட்டானியம் என்ற உலோகப் பொருள் அணு ஆலைகளில் வேண்டப்பட்ட தொருவிலையானபொருள். எமதுவளங்கள் பல எமது கண் முன்னிலையில் தற்பொழுதேகடத்திச் செல்லப்படுகின்றன. அதைத் தடுக்கமுடியாமல் தவிக்கின்றோம். ஆகவேஅரசியல் ரீதியாக எம்மை நாம் காப்பாற்றிஎமது வளங்களை நாமே பரிபாலிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. அதனால்த்தான் தன்னாட்சி அவசியம் என்றுநாம் கூறிவருகின்றோம்.

இலங்கைத் தமிழர் சமூகத்தில் தற் சார்பு என்பதுமிக அரிதாகிவிட்டது. நாம் எமது கால்களில் நிற்கப்பழகவேண்டும். எம்மை நாமே நம்பிவாழவேண்டும். எம்மால் முடியும் என்றதிடநம்பிக்கையுடன் வாழவேண்டும். ஆனால் இந்தக் கருத்துக்கள் இப்பொழுது தமிழர்களைவிட்டு ஏகிவிட்டது என்றே கொள்ளவேண்டியுள்ளது. எமது இளைஞர்கள் பலர் வெளிநாட்டு சொந்தங்களைநம்பித் தமதுதனித்துவ வாழ்க்கையை மறந்து வாழ்கின்றார்கள். பிச்சைப் பாத்திரம் ஏந்த எமதுமக்கள் இன்று பின்னிற்பதில்லை. போரின் வாயிலாக எம்மேல் திணிக்கப்பட்ட இல்லாமைமற்றும் இயலாமை காரணமாகமற்றவர் உதவியை நாடவேண்டி வந்ததில் பிழையில்லை. ஆனால் தொடர்ந்து எம்மை மற்றவர்கள் கவனிப்பார்கள் என்று வாழாதிருப்பது எத்துணை பிழையான செயல் என்பதை நாங்கள் உணரும் காலம் வந்துவிட்டது. வெளிநாட்டில் இருந்துவளங்கள் வரும். பணங்கள் வரும். பலன்கள் வரும் என்று காத்திருந்த காலத்திற்கு ஒரு காலாவதி முத்திரை ஒட்ட வேண்டிய காலம் உதயமாகிக் கொண்டிருக்கின்றது. வெளி நாடுகளின் அரசியல், பொருளாதார். சமூக நிலைகள் தொடர்ந்து ஸ்திரநிலையில் பயணிக்கும் என்று எண்ணுவதுமடமை. ஒருவைரசால் எத்தனைநாடுகள் இன்று பாதிக்கப்பட்டுள்ளன என்று உங்களுக்கு தெரியும்.

ஆகவேதான் உள்ளூரில் நாங்கள் எம்மை நம்பிவாழ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றோம். நாம் நமது கால்களில் நின்று எம்மைப் பாதுகாத்துக் கொள்வதேதற்சார்பு. எம்மைச் சார்ந்துநாங்கள் நிற்கும் போது நாம் நமது வீடுகளில் வீட்டுத்தோட்டங்களை உண்டாக்குவோம். சிறியசிறிய கைத்தொழில்களை. வீடுகளில் இருந்தேசெய்யப் பழகிக்கொள்வோம். தொழில் முனைவோராக மாறிசிறுசிறு தொழில்களை மேம்படுத்தி வெற்றி காணுவோம். அந்தவகையில் தொழில்துறை பெண் உரிமையாளர்கள் பெண் தலை மைத்துவக் குடும்பங்களில் இருந்து எழு வார்கள்.

நாம் எமது கிராமங்களை ஒன்று சேர்த்து முன்னேற்ற மடையச் செய்யவேண்டும். குழந்தைகளின் கல்வி வசதிகளை நாம் சேர்ந்தே பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும்.

பலவிதங்களில் தற்சார்புடன் சம்பந்தப் பட்டதே தன்நிறைவுகாணுதல். எதற்கும் வெளியில் இருந்து வருவனவற்றிற்கு ஏங்கிக் கிடக்காமல் எம்மைநாம் வலுப்படுத்திக் கொள்ள முன்வரவேண்டும். எமது ஏற்றுமதிகளைக் கூட்டி இறக்குமதிகளைக் குறைக் கப்பாடுபடவேண்டும். எந்தவொரு அவசர கால நிலைமையிலும் நாங்கள் எங்களைப்பாதுகாப்பான நிலையில் வைத்துக் கொள்ள சேர்ந்து ஆவனசெய்ய வேண்டும். வருங்காலத்தில் இராணுவகெடுபிடிகள் கூடக்கூடும். அவர்கள் பிழைகள் செய்தால் அவர்களை அடையாளம் காட்டக்கூடியதாகநாம் எம்மைத்தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

பொருளாதாரரீதியாகஎம் மக்கள் தன் நிறைவு அடையநாங்கள் எமது கடல் கடந்த உறவுகளின் உதவியைநாடியுள்ளோம். எமக்கென ஒரு நம்பிக்கைப்பொறுப்பை எமது கட்சி தொடங்கியுள்ளது. வெளிநாட்டு உள்நாட்டுப் பணங்கள் யாவும் நம்பிக்கைப் பொறுப்பால் ஏற்கப்பட்டு உரியவாறான செயற்றிட்டங்களை வட கிழக்கு மாகாணங்களில் இப்போது செய்து கொண்டு வருகின்றோம். இரணைதீவில் கடலட்டை வளர்க்குந் திட்டம் தற்போது மிக வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கின்றது. கனடாவில் கிடைத்த பணத்தை வைத்து அதை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அடுத்து மட்டக்களப்பில் இரு செயற்றிட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன.

உங்கள் மக்களுக்கு. முக்கியமாகபோரினால் பாதிக்கப்பட்டபெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு அவர்கள் சேர்ந்து தம்மை பொருளாதாரரீதியாகப் பலப்படுத்தவும் தன்னிறைவை எய்தவும் அதற்கேற்ற செயற்றிட்டங்களை எமக்கு அடையாளப் படுத்தினால் அவற்றைநாம் பரிசீலித்துப் பார்த்து உரிய உதவிகள் செய்யக் காத்து நிற்கின்றோம்.

எனவே இன்று உங்கள் யாவரையும் சந்தித்ததில் மகிழ்ச்சி. உங்கள் செயற்றிட்டங்களைஎங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நாம் சேர்ந்துஉங்கள் பிரதேசத்தை வளப்படுத்தஆயத்தமாக இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)


**விற்பனைக்கு / குத்தகைக்கு**

2ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறையில் (பருத்தித்துறை மத்திய சந்தைக்கு பின்புறமாக) 2 1/2 பரப்புக் காணியுடன் கூடிய இரண்டு கடையுடன் கூடிய பேக்கரி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும்.

நிறுவனமாகவும் அல்லது பேக்கரியாகவும் பாவிக்கும் வகையில் உள்ளது. விரும்பியவர்கள் தொடர்புகொள்ளவும்.

(C-9462) தொடர்புகளுக்கு :

**077 421 5879**



**English Teacher for After School Program in Kilinochchi**

**Qualification**

1. A degree or advanced diploma from a recognized institution
2. Minimum of 02 years experience in Teaching English for Students - Grade 05 to A/L
3. Fluency in English,both Spoken and Written
4. Motivated Individual With a Keen Interest in Encouraging and Inspiring Students to Learn English

**Salary**

Hourly Pay - Negotiable

**Working Hours**

Flexible Working Hours Depending on Your Availability- Weekends / Week Days After Noon / Evening - 20-25 Hours Per Week

Free accommodation and Food will be Provided for Teachers Working During Weekends.


Please Forward Your Application to :

**Chairman,**
**Mahadeva Swamikal Children Home,**
**Jeyanthinagar, Kilinochchi.**

(C-9451)

# கோட்டா அரசே!
# கொண்டுபோனவர்கள் எங்கே?




















(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் சங்கத்தினரால், தமது தொடர் போராட்டம் தொடங்கி மூன்று வருடங்கள் முடிவுற்றுள்ள நிலையில்,நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த கவனயீர்ப்பு போராட்டமானது, காணாமல் ஆக்கப்படுடுள்ள உறவுகளைக் யைளித்த இடமான் முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து ஊர்வலமாக செல்வபுரம் வீதி வழியாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம்வரை சென்றது. இப்போராட்டத்தில் முன்னாள் பாளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், பிரதேச சபை உறுப்பினர்கள் என அரசியல் பிரமுகர்களும், ஏனைய வெளிமாவட்டங்களிலிருந்து வருகைதந்த காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

(9-281)




# பெண்கள் ரி20 உலகக்கிண்ணம் சம்பியனானது அவுஸ்திரேலியா

மெல்போர்னில் நடந்த மகளிர் டி20 உலகக் கோப்பைப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் வென்று 5-வது முறையாக சம்பியன் பட்டத்தை ஆஸ்திரேலிய அணி கைப்பற்றியது.

மெல்போர்னில் நேற்று நடந்த இறுதி ஆட்டத்தில் இந்திய அணியை 85 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து ஆஸ்திரேலிய அணி கோப்பையை வென்றது.

முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 184 ரன்கள் சேர்த்தது. 185 ரன்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் 19.1 ஓவர்களில் 99 ரன்களுக்கு ஆட்டமிழந்து 85 ரன்களில்




தோல்வி அடைந்தது.

அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆஸ்திரேலிய அணி 5-வது முறையாக சம்பியன் பட்டத்தைத் தட்டிச்சென்றது. இதற்கு முன் 2010, 2012, 2014, 2018 ஆகிய 4 முறை கோப்பையை வென்ற ஆஸ்திரேலிய அணி 5-வது முறையாக இப்போது வாகை சூடியுள்ளது.

ஆட்டநாயகியாக விக்கெட் கீப்பரும், ஆஸ்திரேலிய ஆடவர் அணியின் வேகப் பந்துவீச்சாளர் மிட்ஷெல் ஸ்டார்க்கின் மனைவியுமான அலிஸா ஹீலே (75ரன்கள்) தேர்வு செய்யப்பட்டார். பெத் மூனே தொடர் நாயகியாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்த ஆட்டத்தைக் காண மிகப்பெரிய மெல்பேர்ன் மைதானத்தில் 86.174 ரசிகர்கள் வந்திருந்து ரசித்தனர். மகளிர் கிரிக்கெட் போட்டிக்கு வந்திருந்த மிகப்பெரிய கூட்டமும், ஆஸ்திரேலியாவில் மகளிர் கிரிக்கெட்டுக்கு வந்திருந்த மிகப்பெரிய ரசிகர்கள் கூட்டமும் இதுதான்.

தொடக்க ஆட்டக்கார்கள், ஹீலே, பெத் மூனே இருவரும்தான் ஆட்டத்தின் போக்கையை மாற்றிவிட்டனர். இருவரும் முதல் விக்கெட்டுக்கு சேர்த்த ஸ்கோர்தான் ஆஸ்திரேலிய அணிக்கு வலுவான அடித்தளமாக அமைந்தது.

இந்திய மகளிர் அணியின் பேட்டிங் மிகவும் மோசமாக இருந்தது. லீக் ஆட்டங்களில் சிறப்பாக ஆடிய அதிரடி வீராங்கனை ஷாபாலி வர்மா சொதப்பிவிட்டார். இந்த தொடர் முழுவதிலும் மோசமாக ஆடிய மந்தனா, இறுதிப்போட்டியிலாவது நிலைப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இந்த முறையும் ஏமாற்றம் அளித்தார். இருப்பினும் முதல் முறையாக இறுதிப்போட்டி வரை வந்தது ஆறுதலாக இருந்தாலும் கோப்பையைத் தவறவிட்டது வருத்தமளிக்கிறது.

அதேபோல ரோட்ரிக்ஸ், கேப்டன் கவுர் போன்ற முன்னணி வீராங்கனைகள் அனைவரும் இறுதிப்போட்டியில் ஜொலிக்கத் தவறிவிட்டனர். ஒரு கட்டத்தில் 88 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்திருந்த இந்திய அணி, அடுத்த 10 ரன்களுக்குள் 5 விக்கெட்டுகளை பறிகொடுத்து தோல்வி அடைந்தது.

இந்திய அணித் தரப்பில் அதிகபட்சமாக ஷர்மா(33) ரன்கள் சேர்த்தார். அடுத்தபடியாக கிருஷ்ணமூர்த்தி(19), கோஷ்(18) ரன்கள் சேர்த்தனர். மற்ற வீராங்கனைகளான ஷாபாலி வர்மா(2), மந்தனா(11), ரோட்ரிக்ஸ்(0), கேப்டன் கவுர்(4) ஆகியோர் முதல் 6 ஓவர்களில் விக்கெட்டை இழந்து நடையைக் கட்டினர்.

ஏமாற்றம் அளித்த ஸ்மிருதி மந்தனா

கடைசி வரிசை வீராங்கனைகளான பாண்டே(2), யாதவ்(1), பூனம் யாதவ்(1), ஆகியோர் ஒற்றை இலக்க ரன்னில் பெவி




லியன் திரும்பினர். இந்திய அணியின் விக்கெட் கீப்பர் தனியா பாட்டியாவின் ஹெல்மெட்டில் பந்துபட்டதையடுத்து, அவர் ரிட்டயர்ஹர்ட் முறையில் வெளியேறினார்.

ஆஸ்திரேலியத் தரப்பில், ஸ்கட் 4 விக்கெட்டுகளையும், ஜோனாஸன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்

டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் பேட்டிங்கைத் தேர்வு செய்தது. தொடக்க ஆட்டக்காரர்கள் பெத் மூனே, அல்யஸா ஹீலே ஆகியோர் வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனல் முதல் விக்கெட்டுக்கு இருவரும் 11.5 ஓவர்களில் 115 ரன்கள் சேர்த்துப் பிரிந்தனர்.

இறுதி ஆட்டத்தில் சொதப்பிய ஷபாலி வர்மா

ஆஸ்திரேலிய ஆடவர் அணியின் வேகப் பந்துவீச்சாளர் மிட்ஷெல் ஸ்டார்க்கின் மனைவியும், விக்கெட் கீப்பருமான அல்யஸா ஹீலே அதிரடியாக ஆடி 39 பந்துகளில்75ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். இதில் 5 சிக்ஸர்கள், 7 பவுண்டரிகள் அடங்கும்.

4-வது ஓவரிலேயே ஹீலே, மூனே இருவரையும் ஆட்டமிழக்க வைக்கும் வாய்ப்பு கிடைத்தும் அதை இந்திய வீராங்கனைகள் கேட்சை நழுவவிட்டனர். மூனே 41 பந்துகளில் அரைசதம் அடித்தார்.

அடுத்து களமிறங்கிய கேப்டன்




லானிங்(16) ரன்னில் ஷர்மா பந்துவீச்சில் வெளியேறினார். 3-வது விக்கெட்டுக்கு வந்த கார்டனர் 2, ஹெயின்ஸ் 4 ரன்னில் பெவிலியன் திரும்பினர்.


மூனே 54 பந்துகளில் 78 ரன்கள் சேர்த்து(10பவுண்டரி) இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். காரே 5 ரன்களுடன் மூனேவுக்கு துணையாக இருந்தார்.

லீக் சுற்றில் இந்திய அணியிடம் தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி தோல்வி அடைந்தாலும், இந்த போட்டியில் அந்த தோல்விக்குப் பழிதீர்க்கும் வகையில் விளையாடியது.




அதுமட்டுமல்லாமல் 4 முறை இறுதிப்போட்டியை எட்டி இருப்பதால், அந்த அனுபவம், கடைசிக்கட்ட நெருக்கடியை சமாளித்து ஆடுவது போன்றவற்றைக் கச்சிதமாகச் செய்தனர்.

இந்தியத் தரப்பில் தீப்தி ஷர்மா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்






# குண்டுத் தாக்குதல் தொடர்பில் உயர் மட்டத் தலைவரிடமும் விசாரணை நடத்த வேண்டும்

## மைத்திரி மீது கர்தினால் காட்டம்



(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் உயர் மட்டத் தலைவர் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் நடக்கப் போவது குறித்து அறிந்திருந்தும் எதனையும் செய்ய வில்லை என தற்போது தகவல் வெளியாகியுள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயர் பதவியில் இருந்து அந்த நபர், தாக்குதல் பற்றி அறிந்தும் உறக்கத்தில் இருந்திருந்தால், அவரை குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைத்து விசாரணை நடத்த வேண்டும் எனவும் பேராயர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதல் சம்பந்தமாக விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரிகள் தற்போது இடமாற்றம் செய்யப்பட்டு வருவதாக தகவல்கள் கிடைத்தது.

இதனை நான் கடுமையாக எதிர்க்கின் றேன்.

அத்துடன் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகள் போதுமானதல்ல எனவும் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையே அரச உயர் மட்ட தலைவர் என்று மல்கம் ரஞ்சித் ஆண்டகை மறை முகமாகக் குறிப்பிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

## நவமங்கை நிவாசத்தில் தையல் ஆசிரியர் தேவை

உங்கள் அனுபவம், தராதரமுடன் கூடிய சுய விபரங்களுடன் 05.04.2020 இற்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

நவமங்கை நிவாசம்,
இராஜவீதி,
கோப்பாய் மத்தி.
தொ.பேசி: 021 223 0418

(2536)

---

## 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு



தோற்றம்: 01 07 1956

மறைவு: 08 02 2020

கடந்த 08.02.2020 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர். அப்பையா யோகநாதன்

ஓய்வு நிலை ஊழியர், யாழ்.மாநகரசபை

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 09.03.2020 திங்கட்கிழமை இன்று காலை 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(2527)

சென். செபஸ்தியர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். 077 258 1068

மனைவி - சந்திரமலர்
மற்றும் மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்

---

## மரண அறிவித்தல்

### அமரர். பற்றிக்ஜோசவ் றீற்றம்மா



யாழ்.மண்டைதீவு 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பற்றிக்ஜோசவ் றீற்றம்மா அவர்கள் 06.03.2020 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் பற்றிக் ஜோசவ் (ஜெயம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தொம்மைப்பிள்ளை சந்தானாள் (இரத்தினம்) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்க ளான சாமிநாதர் லூர்துமேரி பிரான் சிஸ்கம்மா (நல்லம்மா) தம்பதியரின் அன்பு மருமகளும், லில்லி மாக்ரெட், காலஞ்சென்ற லூர்து நாயகி (கனடா), சூசைதாசன், மேரி அன்ரனிற்றா (கனடா), காலஞ்சென்ற யேசுதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற ஜெயரட்ணம் (கனடா), ஜெயக்குமார் (கனடா) பிரான்சிஸ் சேவியர், றொபேட் வின்சன் (கனடா), ஜெயமணி, அன்ரனிதாசன், ஆகியோரின் மைத்துனியும் மதி (கனடா), றொபினா (கனடா) ஆகியோரின் சகலியும், ஜான்சி, சுஜித்தா, ஜெசில்டா, சுலக்சி ஆகியோரின் மாமியாரும் றுபினா (கனடா), யூலினா (கனடா), ஜொவித்தா (கனடா), றொசிற்றா (கனடா), டொறன்ரீனா (கனடா), டெலன்ரீனா (கனடா), றொபேட் லோயேர்ஸ் (கனடா), பிறான் மிக்ஷன் (லண்டன்), அனிற்றா (கனடா), ஜொனிற்றா (கனடா), அனிஸ்ரன் (கனடா) ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடன் 09.03.2020 திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு மண்டைதீவு புனித பேருதுவானவர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித பேருதுவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

3ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(2534)

தகவல்:
குடும்பத்தினர்

---

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
சின்னம்மா திருநாவுக்கரசு

எமது குடும்பத்தலைவி அன்புத் தெய்வம் திருமதி சின்னம்மா திருநாவுக்கரசு இறைபதமடைந்த10.02.2020 முதல் இற்றை வரை உடனிருந்து ஆறுதல் கூறி தன்னலம் பாராது உதவி புரிந்த அன்புள்ளங்களுக்கும், நேரில் வந்தும், தொலைபேசி, முகப்புத்தகம் மூலமாகவும் மற்றும் பிறவழிகளிலும் தம் துயரினைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் இறுதிக் கிரியையிலும் இறுதி ஊர்வலத்திலும் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் **நாளை மறுதினம் 2020.03.11 புதன்கிழமை காலை 04.30 மணியளவில்** அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து பகல் 12.00 மணியளவில் **"கரணவாய் மூத்தவிநாயகர் ஆலய திருமண மண்டபத்தில்"** இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ள அனைத்து அன்புள்ளங்களுக்கும் எம் சிரம் தாழ்த்தி,கரங்கூப்பி நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது தாயாரின் இறுதி நிகழ்வின் போது நாம் உணர்வுகளுக்கு அடிமையாகியிருந்த தருணத்தில் எமது ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் நாம் யாருக்காவது தனிப்பட்ட அழைப்பைத் தரத்தவறியிருப்பின் அதனை மன்னித்து பெருமனதோடு இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(இ-9993)

பாடசாலை வீதி, கரணவாய் மத்தி, கரவெட்டி.

குடும்பத்தினர்.

# யாழில் நவீனமயப்படுத்தப்பட்ட கூட்டுறவு கிராமிய வங்கி திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை வீமன் காமத்தில் நவீனமயப்படுத்தப் பட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கி நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் நா.கணே சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்டு கிரா மிய வங்கியின் புதிய கட்டடத் தைத் திறந்து வைத்தார்.



தேசிய கொள்கைகள் அமை ச்சால் ஒதுக்கப்பட்ட1.5 மில்லியன் ரூபாய் நிதிப் பங்களிப்பு மற்றும் தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நிதிப் பங்களிப்பில் கிராமிய வங்கிக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வலிகாமம். வடக்குப் பிரதேச சபையின் தவி சாளர் சோ.சுகிர்தன், தெல்லிப் பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ந.உமாக ரன், வலிகாமம் கொத்தணியின் தலைவர் செ.செல்வராசா, தெல் லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ங்களின் பொது முகாமையாளர், பணிப்பாளர், பணியாளர்கள், கொத்தணிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் முற்றி லும் நவீனமயப்படுத்தப்பட்ட முதலாவது கிராமிய வங்கியாக தெல்லிப்பழை வீமன்காமத்தில் திறந்து வைக்கப்பட்ட கிராமிய வங்கி விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-18)

# கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்பதை விடுத்து எதிர்கால அபிவிருத்தி பற்றி சிந்திக்க வேண்டும்

## நடனதேவன் வேண்டுகோள்

(சாவகச்சேரி)

நாம் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்பதனை விடுத்து எதிர்கால அபிவிருத்தி பற்றி சிந்திக்க வேண்டும் என சாவ கச்சேரி நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப் பினர் ம.நடனதேவன் தெரிவித் தார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதா ந்த அமர்வின் போதே மேற்க ண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபை ஆரம்பிக்கப்பட்டு இர ண்டு வருடங்கள் கடந்து விட் டன. ஆனால் இப்போதும் சபை யில் பிரேரணைகளை எவ்வாறு சமர்ப்பிப்பது என்பது தொடர்பாக சொல்லிக்கொடுக்க வேண்டியு ள்ளது.

இவ்வாறு இருந்தால் எப் போது அபிவிருத்தி செய்வது? நடந்தவற்றைப் பேசிப் பயனி ல்லை. வந்த பாதையைப் பார்ப்ப தனை விடுத்து எதிர்கால அபிவி ருத்தி தொடர்பாக சிந்திக்க வேண் டும். நாம் வெறுமனே ஆலோச னைகளைக் கூறுவதுடன் நின்று விடுகிறோம். அந்த ஆலோச னையைச் செயற்படுத்தத் தவறு கின்றோம்.

சாவகச்சேரி நகரசபைக்கு ஆலோசனைக் குழு ஒன்றின் தேவை அவசியம். உரிய துறை சார்ந்தவர்களை ஆலோசனைக் குழு ஒன்றினுள் உள்ளடக்கி அவர்களின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தி மேலும் அபிவிருத்தி செய்ய முயல வேண் டும் என அவர் மேலும் தெரிவித் தார். (ஜ-30)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## உருத்திராட்ச மகிமை

உருத்திராட்சத்தின் அடிப் பாகம் விஷ்ணு என்றும், துவாரம் உருத்திரன் என் றும், மேற்புறம் பிரம்மா என்றும் கூறுவதுண்டு. உருத்திராட்சத்திற்கு கண் மணி, தெய்வமணி, புனித மணி, கடவுள் மணி, நாயகன் விழிமணி எனப் பல பெயர்கள் உண்டு.

நன்றாக விளைந்த உரு த்திராட்சக் கொட்டைகளின் நடுவில் பழைய ஓட்டைக் காலனாவை வைத்தால் அது சுற்றும், அதிலுள்ள மின்சக்திதான் இதற்குக் காரணம். உருத்திராட்சம் இயற்கையிலேயே நடுவில் துளையைக் கொண்டது. எனவே இதை மாலையா கக் கோர்ப்பது மிகவும் எளி மையானது.

சிவனுடைய கண்களி லிருந்து தோன்றியதால் உருத்திராட்சம் சிவ சின் னங்களில் ஒன்றாகக் கரு தப்படுகின்றது.

உருத்திராட்ச மாலை யில் 108 அல்லது 54 அல் லது 27 உருத்திராட்சங்கள் இருக்கலாம். உருத்திராட் சத்தை அணிபவரின் பாவ வினைகளை ஈசன் போக்கு வதாக பத்ம புராணம் கூறுகிறது.

### உருத்திராட்சம் அணிவதால் உண்டாகும் பயன்கள்

1. இரத்த அழுத்தம் சீரா கும்
2. கணவன் - மனைவி உறவில் அந்நியோன்னியம் உண்டாகும்
3. மனம் அமைதியடை யும்
4. தன்னம்பிக்கை வள ரும்
5. மன ஒருமைப்பாடு உண்டாகும்

### உருத்திராட்ச மணி தரிக்கும் இடங்கள்

1. உச்சி (குடுமி) - 1 மணி
2. தலை (நெற்றிக்கு மேல்) - 22 அல்லது 36 மணிகள்
3. காது ஒவ்வொன்றிலும் - 1 அல்லது 3 அல்லது 6 மணிகள்
4. கழுத்து - 1 அல்லது 3 அல்லது 27 அல்லது 32 மணிகள்
5. மார்பு - 54 அல்லது 108 மணிகள்
6. கைகளில் - 12 அல் லது 16 மணிகள்
7. கை மணிக்கட்டு - 12 மணிகள்

மேற்கண்ட 7 உறுப்பு களைத் தவிர வேறு உறுப் புகளில் உருத்திராட்ச மணி களை அணிவது குற்றமா கும்.

### உருத்திராட்ச மணிகளை அணியும் காலம்

1. சந்தியாக்காலம்
2. சிவ மந்திர ஜெபம் செய்யும் காலம்
3. சிவனை தியானிக்கும் காலம்
4. சிவாலய தரிசனம் செய்யும் காலம்
5. சிவ புராணம் ஓதும் காலம்
6. சிவ புராணத்தை பிறர் ஓத கேட்கும் காலம்
7. திருமுறைகளை பாரா யணம் செய்யும் காலம்
8. சைவசமய சொற் பொழிவுகளை கேட்கும் காலம்

### உருத்திராட்ச மணிகளை அணிய தகாத காலம்

1. தூங்கும் போது
2. மல ஜலம் கழிக்கும் போது
3. உடம்பு தூய்மையாக இல்லாத போது
4. நோயுற்று படுக்கையில் கிடக்கும் போது
5. வீட்டின் தூய்மை கெடும் போது
6. பிறப்பு, இறப்பு நிக ழும் போது

## இராசி பலன்

**மீனம்:** உங்களின் திறமைகள் வெளிப் படும் நாள், எடுத்த காரியங் களை எளிதில் செய்து முடி ப்பீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், போசன சுக முண்டு.

**மேடம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்:** பணிபுரியும் இடத்தில் பெய ரும் புகழும் கூடும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள், குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்:** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலக லாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கும்பம்:** புதிய தொழில் வாய்ப்புக் கள் தேடிவரலாம், கல்யா ணக் கனவுகள் நனவாக லாம், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | ராகு |
| சூரி | இராசி பலன் | கிரகநிலை | |
| புத | சந்திராஷ்டமம் | திருவோணம், அவிட்டம் | சந் |
| சனி, கேது, குரு, செவ் | | | |

09.03.2020
மாசி 26, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
பூரணை பின்னிரவு 12.01 மணிவரை
பூரம் பின்னிரவு 1.56 மணிவரை
சுபநேரம் 12.23-1.53 மணிவரை
இராகுகாலம் 7.53-9.23 மணிவரை
முழு நோன்மதி தினம்
பூரணை விரதம்
காலம் வீணானால் திரும்பக் கிடைக்காது
வளவன்

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் திருப்தி தரும், கௌரவமான சம்பவங் கள் இடம்பெறலாம்.

**மகரம்:** எந்தக்காரியத்தையும் பல முறை யோசித்துச் செய்வது நல்லது, உடல்ரீதியான உபா தைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** திடீர் பயணங்கள் ஏற்பட லாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர் கள், குடும்பத்தில் சுமைக ளும் பொறுப்புகளும் கூட லாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** வீண் பழிகள் அகல விரை ந்து நடவடிக்கை எடுப்பீர் கள், தொழில் ரீதியாக முக் கிய நபர்களை சந்திப்பீர் கள், பயணத்தால் பலனு ண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** உறவினர்கள் உங்கள் இல் லம் தேடி வரலாம், இனிய சம்பவங்கள் நடை பெறும் நாள், தொலைபேசி வழி யில் சுபசெய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** பயணங்கள் கைகூடும் வாய் ப்புண்டு, எடுத்த காரியங்க ளில் முன்னேற்றம் காண்பீர் கள், ஆடம்பரப் பொருட் களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், போசனசுக முண்டு.

**கன்னி:** குடும்பத்ினரை அனுசரி த்து செல்லவேண்டிய நாள், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### கோழிப்பண்ணைக்கான பொருட்கள், மருந்துக்கள் கொள்வனவுக்கான கேள்விப்பத்திரம்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவு சங்கத்தின் 10 கோழிப்பண்ணை திட்டத்திற்கான பொருட்கள் மற்றும் மருந்துகள் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை காணப்படுவதனால் அதற்கான கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

| இல | பொருட்கள் | எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|
| 01 | தீண்பாத்திரம் | 275 | நடுத்தர அளவு |
| 02 | தீண்பாத்திரம் | 275 | பெரிய அளவு |
| 03 | தண்ணீர் பாத்திரம் | 275 | நடுத்தர அளவு |
| 04 | தண்ணீர் பாத்திரம் | 275 | பெரிய அளவு |
| 05 | விற்றமின் | 10Kg-(5000 கோழிகளுக்கு 5 தடவை) | தேவையான போது மட்டும் கொள்வனவு செய்யப்படும் |
| 06 | ரணிகட் Oil Vaccine | 6000 doses | |
| 07 | மருந்துக்கள் | -- | தேவையான போது மட்டும் கொள்வனவு செய்யப்படும் |

#### நிபந்தனைகள்

1. பொருட்கள் தேவைக்கேற்ப பகுதி பகுதியாக (குறைவாகவும், மேலதிகமாகவும்) கொள்வனவு செய்யப்படும்.
2. கூறுவிலை ஆராயும் போது இப் பொருட்களுக்குரிய மாதிரியை **(Sample)** சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கூறுவிலைகள் அனைத்தும் மூடிய நிலையில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
4. பொருட்கள் அனைத்தும் தரமானதாக இருத்தல் வேண்டும்.
5. கூறுவிலையில் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் தமக்கும் சங்கத்திற்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்படும்.
6. சங்கத்தால் கோரிக்கை விடுத்து 10 நாட்களுக்குள் பொருட்கள் தரப்பட வேண்டும். கால்நடை வைத்தியரின் தர உறுதிப்படுத்தல் சிபார்சுக்கு அமைவாக செலவுக்கான பணம் காசோலையாக வழங்கப்படும்.

இக் கேள்விப்பத்திரமானது 2020.03.24 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் சங்க தலைவருக்கு கிடைக்கத்தக்கதாக "**தலைவர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம், ஏ35, பரந்தன் பிரதான வீதி, கைவேலி, புதுக்குடியிருப்பு**" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலக நேரத்தில் நேரிலோ இதற்கான கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.27.03.2020 ஆம் திகதி முற்பகல் 09.30 மணிக்கு எமது காரியாலயத்தில் கூறுவிலை ஆராயப்பட உள்ளதால் தாங்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றீர்கள். (C-9428)

**தலைவர்,**
**புதுக்குடியிருப்பு, பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்.**


# வீதிகளில் சீமெந்து குழைத்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் சீமெந்து குழைத்தால் சட்ட நடவடிக்கை எடுக்க நகரசபை தீர்மானித்துள்ளது. அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது சபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் முன்வைத்த கோரிக்கையினை அடுத்தே சபை இம் முடிவுக்கு வந்துள்ளது. நகரசபை உறுப்பினர் ஜெயக்குமார் தெரிவிக்கையில்,

வீதிகளில் சீமெந்து குழைப்பதனால் வீதி சேதமடைவதுடன், விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இது தொடர்பாக நகர சபை கண்காணித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது வீடுகளில் காறை அமைப்பதற்கு பதிலாக வீதிகளை காறையாகப் பயன்படுத்துகிறார்கள் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-30)


## நவமங்கை நிவாசத்தில் இலவச தையல் பயிற்சி

இடம்: நவமங்கை நிவாசம்,
இராஜவீதி, கோப்பாய் மத்தி.

தொ.பே: 021 223 0418

விண்ணப்ப முடிவுத்திகதி: 10.04.2020

**உங்கள் சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.**

(2536)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 39 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண பெண்<br>தொ.இ: B/10620 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: - செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/10636 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: - செவ் 6 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. களஞ்சியக்காப்பாளர்.<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10622 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா.: - செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/10637 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 24 செவ் 5 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. மாட்டுப் பண்ணை, இயற்கை விவசாயம்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண். சைவ போசனம் மட்டும்<br>தொ.இ: B/10623 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 30½ செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. தந்தையுடன் சொந்தக்கடை நடத்துகின்றார்<br>எதிர்பார்ப்பு: தனியார் நிரந்தர அரச தொழில்<br>தொ.இ: G/10643 |
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: - செவ் 11 இல்<br>உயரம்:160cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரணபெண். வேறு இனமும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>தொ.இ: B/10625 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: - செவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: **B.A. Temporary Work in Siddha Medicine.**<br>எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகத்தர்<br>தொ.இ: G/10645 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஜேகப் பாக் ஹோட்டல், திருகோணமலையில் 29.02.2020 அன்று நடைபெற்ற 2020 ஆம் ஆண்டுக்கான சமூக சேவைக்கான தேசிய விருது வழங்கும் நிகழ்வில் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**செங்கைப்புரவோன் கலாநிதி.இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி மனித உரிமைகள் அமைப்பினால்

*"மகாத்மா காந்தி"*

என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென் மேலும் தொடர நாமும் அவர்களை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**உரிமையாளரும், ஊழியர்களும்**
**சிறி மீனாட்சி நகை அகம்**
**183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(2485)

# சாவகச்சேரியில் பணிபுரியும் சீனப் பிரஜை

# 14 ஆம் திகதி வரை கண்காணிப்பில்

## வடக்கு சுகாதார சேவைகள் திணைக்களம் தெளிவுபடுத்தல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் பணிபுரியும் சீனப் பிரஜை தங்குமிடத்தை விட்டு வெளியேறாதவாறு எதிர்வரும் 14 ஆம் திகதி வரை கண்காணிக்கப்படுகிறார் என வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள சமுதாய வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி இ. கேசவன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பாக அவர் விடுத்துள்ள விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெளிநாட்டிலிருந்து வருவோர்களிடம் இருந்து இலங்கைக்குள் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படாது இருப்பதற்காக இலங்கை அரசாங்கம் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விமான நிலையங்களிலும் உள்நாட்டிலும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன்படி தென் கொரியா, ஈரான், இத்தாலி மற்றும் சீனாவிலுள்ள வுஹான் மாகாணம் முதலான இடங்களிலிருந்து இலங்கைக்கு வருபவர்கள் விமான நிலையத்திலிருந்து நேரடியாக நோய்த் தடுப்பு கண்காணிப்பு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். இவர்கள் 14 நாட்களிற்கு கண்காணிக்கப்பட்டு நோய் இல்லாத பட்சத்தில் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவர். நோய் உள்ள பட்சத்தில் அங்கொடை தொற்று நோய் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்படுவார்கள். சீனாவின் மற்ற மாகாணங் களிலிருந்து வருபவர்களும் மற்றும் ஏனைய கொரானா வைரஸ் தொற்றுள்ள நாடுகளுடன் சம்பந்தப்பட்டவர்களும் அவரவர் வீடுகளிற்கு அல்லது தங்குமிடங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டு 14 நாட்களிற்கு வீட்டை விட்டு அல்லது தங்குமிடங்களை விட்டு வெளியேறாது இருக்குமாறு பணிக்கப்பட்டு தொடர் அவதானத்தில் வைக்கப் படுவார்கள். இவர்களிடத்து கொரோனா சம்பந்தமான நோய் அறிகுறிகள் தென்பட்டால் அருகிலுள்ள கொரோனா சிகிச்சைக்காக அடையாளம் காணப்பட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்படுவார்கள். இக் கண்காணிப்பு சுகாதார வைத்திய அதிகாரிகளாலும் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களாலும் மேற்கொள்ளப்படும்.

இந்நிலையில் வுஹான் மாகாணத்தைச் சேராத சீன பிரஜை ஒருவர் மார்ச் முதலாம் திகதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தடைந்து சுகாதார பரிசோதனைகளின் பின் நோய் தொற்று இல்லை எனக் கண்டு அவர் பணி புரியும் சாவகச்சேரி IROAD PROJECT எனப்படும் வீதி அபிவிருத்திப் பணி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டார். அரசாங்க அறிவுறுத்தலிற்கமைய அவர் தனது தங்குமிடத்தை விட்டு வெளியேறாதவாறு மார்ச் 14 ஆம் திகதி வரை கண்காணிக்கப்படுகிறார். இவரை தினசரி அடிப்படையில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர் முதலானோர் களால் அவதானிக்கப்படுகிறார். இதுவரை அவருக்கு எந்த நோய்க்கான குணங்குறிகளும் தென்படவில்லை.

குணங்குறிகள் தென் பட்டால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவார். குணங்குறிகள் இல்லாத பட்சத்தில் அவர் மார்ச் 14 ஆம் திகதிக்கு பின்னர் வெளிநடமாட்டத்திற்கு அனுமதிக்கப்படுவார். இவர் IROAD PROJECT எனப்படும் வீதி அபிவிருத்திப் பணி நிறுவனத்தில் பணிபுரிவதால் இந் நிறுவனத்தின் திட்டப் பணியாளரால் எழுத்து மூலமாக எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இவர் தங்குமிடத்தைவிட்டு வெளியேறக்கூடாது என்று அறிவுறுத் தப்பட்டது.

இந்நடவடிக்கையானது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக் கமைய சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகரால் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் அவர் பணிபுரியும் நிறுவனத்திற்கு நோய் தடுப்பு தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக பிரபல கோடீஸ்வரரின் பயணம் இரத்து

(கொழும்பு)

இலங்கைக்கு வரவிருந்த ஐக்கிய அரபு இராச்சியத்தை தளமாகக்கொண்ட இந்திய கோடீஸ்வரரும் YY சர்வதேச குழும நிறுவனத்தின் தலைவருமான யூசுப் அலி, கொரோனா வைரஸ் தொற்று பரவுகை அச்சம் காரணமாக தமது பயணத்தை இரத்துச் செய்தார்.

இலங்கையில் அவர் பல்வேறு பாரிய முதலீட்டு திட்டங்கள் தொடர்பாக பேச்சு நடத்தவிருந்தார்.

அலி எதிர்வரும் 15ஆம் திகதியன்று இலங்கைக்கு வரவிருந்தார். இலங்கையில் அவர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுட்பட



அரசாங்கத்தின் உயர்மட்டத்தினருடன் சந்திப்புக்களை நடத்தவிருந்தார்.

இதன்போது ஒரு பில்லியன் டொலர்கள் தொடர்பான முதலீடுகள் தொடர்பான விடயங்களும் அடங்கியிருந்தன.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் சுகாதார அமைச்சு விடுத்த கொரோனா வைரஸ் எச்சரிக்கையை அடுத்தே அலி தமது பயணத்தை இரத்து செய்தார். YY சர்வதேச குழுமத்துக்கு சர்வதேச ரீதியாக YY ஹைப் மார்க்கட் சந்தை வலையமைப்புத் தளங்கள் உள்ளன.

இந்த நிலையில் போபரஸ் பட்டியலின்படி யூசுப் அலி 5.2 பில்லியன் டொலர்கள் சொத்துக்களுடன் 21 ஆவது இந்திய பணக்காரராக தெரிவானார் என்பதும் மத்திய கிழக்கில் அவர் முதல் பணக்காரராக தெரிவானார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கைக்குள் ஊடுருவிய துருக்கி தீவிரவாதிகள்

## வசந்த சேனநாயக்க சாட்சியம்



(கொழும்பு)

முன்னைய ஆட்சியின் போது அமெரிக்கத் தூதரகம் இலங்கையின் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துருக்கி தூதரகம் அந்த நாட்டின் தீவிரவாத அமைப்பான (எப்)பெட்டோ அமைப்பின் நடவடிக்கைகள் இலங்கைக்கு வந்துள்ளமை குறித்து வெளி விவகார அமைச்சுக்கு அறிவித்திருந்தது.

எனினும் இந்த அமைப்பின் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை அமெரிக்க தூதரகம் விரும்பவில்லை. அந்த அமைப்பை அமெரிக்கா தீவிரவாத அமைப்பாக கருதவில்லை என்றும் வசந்த சேனநாயக்க தெரிவித்தார்.

பெட்டோ அமைப்புடன் இலங்கையின் முன்னாள் அமைச்சர்கள் இருவரும் வர்த்தக தொடர்பைக் கொண்டிருந்தனர் என்ற தகவல் தொடர்பில் கருத்துரைத்த அவர் முன்னாள் அமைச்சர், றிசாத் பதியுதீன் அந்த அமைப்பினருடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்பது பின்னர் தமக்குத் தெரியவந்ததாகவும் கூறினார்.

இந்நிலையில் பெட்டோ அமைப்பு தொடர்பாக துருக்கி தூதரகம் அனுப்பிய எச்சரிக்கை கடிதம் தொடர்பில் தாம் ஜனாதிபதியின் செயலருக்கும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ருவான் விஜயவர்த்தனவுக்கும் கடிதம் மூலம் அறிவித்ததாக வசந்த சேனநாயக்க தெரிவித்தார்.

இதன்போது தேசிய பாதுகாப்பு கருதி இவ் விடயம் தொடர்பில் பாதுகாப்புச் சபையில் பேசவுள்ளதாக ஜனாதிபதி செயலர் தமக்கு அறிவித்ததாக வசந்த சேனாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொருளாதாரத்தை ஆட்டிப் படைக்கும் கொரோனா; இலங்கையில் ஆடைத் தொழிற்சாலைகளுக்குப் பூட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் இலங்கையின் பொருளாதாரத்தையும் ஆட்டிப்படைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான மூலப் பொருட்கள் சீனாவிலிருந்தே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இலங்கையின் ஆடை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை சீனாவிலிருந்து இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக இங்குள்ள பிரபலமான சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆடை உற்பத்தி நிலையங்களை தற்காலிகமாக மூட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு தொழில் புரிந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொழில் வாய்ப்பை இழக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ஆடை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் ரொஹான் லக்ஷானி, தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக இலங்கையின் ஆடை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை சீனாவிலிருந்து இறக்குமதி செய்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆடை உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் சில நிலையங்கள் இம் மாதம் முதல் தற்காலிகமாக மூடப்படவுள்ளதுடன், ஏனையவை ஏப்ரல் மாத விடுமுறையின் பின்னர் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதனால் எதிர்வரும் மே மாதம் அளவில் சுமார் ஒன்பதரைக் கோடி ரூபாய் வரை நட்டம் ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# 9 இளைஞர்கள் கைது

(ஹற்றன்)

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்ற ஒன்பது இளைஞர்கள் ஹற்றன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டுக்காகவே இவர்களை பொலிஸார்கைது செய்தனர்.

25 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களை ஹற்றன் நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



ஆன்மிக விஞ்ஞான விளக்க உரை

**கபாலத்தில் சுரக்கும் அமிர்தங்கள்**

**வளவாளர்-Dr.S.பாலசுப்பிரமணியம்**
மனவளக்கலைப் பேராசிரியர்
**காலம்- 09.03.2020 மாலை 3 மணி**
**இடம்- யாழ்.தவமையம்**
**14/4, முதலாம் குறுக்குத் தெரு, கோயில் வீதி, யாழ்ப்பாணம்**
(U.S. ஹோட்டலுக்கு முன் ஒழுங்கை)
(St.Johnes Church அருகாமையில்)

**தொடர்புகளுக்கு: 076 395 9293**
**077 772 6732**

அமைதியான ஆழ்ந்த தூக்கம்
இளமையை தக்க வைத்தல்
நோயின்றி வாழ்தல்
சூரிய நமஸ்காரத்தின் தியானத்தின் அவசியம்
போன்ற விளக்கங்கள் வழங்கப்படும்.
அனைவரையும் தவறாது பங்குபற்றி
பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(2540) **யாழ். தவமையம்**


## நாடாளுமன்றத் தேர்தலில்
# 2 இலட்சம் அதிகாரிகள் கடமையில்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளுக்காக சுமார் 2 இலட்சம் அதிகாரிகளை பயன்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

இதில் பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த முறை தேர்தலுக்காக சுமார் 12 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்கள் ஆயத்தப்படுத்தப்படவுள்ளன. அதேநேரம் குறைந்தபட்சம் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் பயனபடுத்தப்பட்டாலும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 24 ஆயிரத்திற்கும் அதிகமான பொலிஸ்அதிகாரிகள்தேவைப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

அத்துடன் பொலிஸ் அதிரடிப்படையையும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், தேவைப்படின், இராணுவத்தினரின் உதவியையும் பெறவுள்ளதாக அந்த ஆணைக்குழு மேலும் தெரிவித்தது. (இ-7)

## கொரோனா வைரஸ் தொற்று
# இத்தாலி அரசின் நடவடிக்கையால் 60 ஆயிரம் இலங்கையர்கள் பாதிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால் இத்தாலியின் லோம்பார்டி பிராந்தியம் மற்றும் 14 மாகாணங்கள் தனிமைப்படுத்தப்பட்டமை காரணமாக அங்கு வசிக்கும் சுமார் 60 ஆயிரம் இலங் கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர் கள் இத்தாலியில் வசித்து வருகின்றனர். அவர்களில் சுமார் 60 சதவீதம் பேர் லோம்பார்டி பிராந்தியத்தில் உள்ளனர்.

இந்நிலையில், இத்தாலியின் இந்தத் தனிமைப்படுத்தல் நடவடிக்கை காரணமாக சுமார் 60 ஆயிரம் இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தத் தீர்மானம் காரணமாக 16 மில்லியன் மக்கள் பாதுகாக்கப்பட்டதுடன், தனிமைப்படுத்தலானது ஏப்ரல் மாதம் ஆரம்பப் பகுதி வரை நீடிக்கும் என்று அந்நாட்டுப் பிரதமர் தெரிவித்தார். இத்தாலியில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, 230 ஐ கடந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கையானது 5,883 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொக்குவிலில் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் அரசியலில் பெண்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளும் இன்னும் அதிகமாக ஈடுபடவேண்டியதன் அவசியமும் எனும் தலைப்பிலான விசேட கலந்துரையாடல் பௌர்ணமி தினமான இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி எனும் முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (இ-18)


# உலக சைவத் தமிழர்களின் தாயகம் திருவண்ணாமலை

கிரிவலம் 09/03/2020

**ஸ்ரீ உருத்திர யாகம்**

**யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவிலில் கடந்த 07.02.2020 தொடக்கம் 10.02.2020 வரை மிகவும் சிறப்பாக நடந்தேறியது யாவரும் அறிந்ததே. சபையின் சிந்தனைக்கு ஏற்ப வன்னிப் பெருநிலப்பரப்பில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ உருத்திரயாகம் செய்ய தீர்மானித்து இருக்கின்றோம். அந்த யாகத்தில் அனைவரும் பங்குபற்றி பங்களிப்புச் செய்து ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம்.**

**தொடர்பு- 077 378 3316**



## ஆபத்தின் விளம்பில் இந்துமதம்

இந்து மதம் காலத்தால் மூத்ததும் மக்களை வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய ஒரு மதமாகும்.

இந்து மதம் கூறும் அறக்கருத்துக்களும் வாழ்வியல் முறைகளும் இலங்கையை போர்த்துக்கீசர் கைப்பற்றுவதற்கு முன்னர் மிக மிக உயர் நிலையில் இருந்ததை எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் இந்துமக்கள் விருப்பமின்றி வலோத்காரமாக புகுத்தப்பட்டதே இந்துமதம் தவிர்ந்த ஏனைய மதங்களாகும்.

இந்த நிலையிலும் இந்துமதம் இணக்க சிந்தனை மற்றும் எந்த உயிர்க்கும் தீங்கு செய்தல் ஆகாது என்ற ஆகமவாக்கியங்களுக்கு ஏற்ப இன்றும் செயற்பட்டு வருகின்றமை பலவீனமான நிலையாக எவரும் நினைக்கக் கூடாது என ஒவ்வொரு இந்துவும் கடவுளை வேண்டுவதை கண்டிருக்கின்றோம்.

இந்துமதம் மதவாதம், இனவாதம் அற்றது

ஆயினும் இந்து மதம் தற்போது ஆபத்தின் விளிம்பில் சென்றுகொண்டிருப்பது உலகம் முழுவதும் இந்துக்களின் மனதில் கவலையை உண்டாக்கியுள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வு மற்றும் ஆய்வு மகாநாடு ஒன்று நடாத்த தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் இந்து மதத்தின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிலைமைகளைக் கருத்தில் எடுத்து தற்போது இந்துமதம் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை ஆய்வுக்கட்டுரை வடிவில் எழுதி கீழ்வரும் விலாசத்திற்கு 01.05.2020 இற்கு முன் அனுப்பி உதவுமாறு வேண்டுகின்றேன்.

**செயலாளர், சைவப்பிரகாசப் பேரவை, யாழ்ப்பாணம்.** **0773783316**

(சி-9448)

# இலங்.அரசை குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துங்கள்

## ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரிடம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை



(முல்லைத்தீவு)

**சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடைய ஏற்பாட்டில் நேற்று முல்லைத்தீவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தின் நிறைவில் ஐ.நா.மனித உரிமை ஆணையாளருக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஜெனிவாவில் கையளிக்கப்பட்ட மகஜர் ஒன்றும் வாசிக்கப்பட்டது.**

குறித்த மகஜரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை தனித்தனியே தேடியலைந்த நாம் கடந்த 08.03.2017 இல் ஒன்றிணைந்து தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை தொடங்கினோம். நேற்றையதினம் எமது போராட்டம் மூன்று ஆண்டுகளை நிறைவு செய்து நான்காவது ஆண்டில் கால் பதிக்கின்றது.

இந்த மூன்று ஆண்டுகளுக்குள் தமது பிள்ளைகளைத் தேடி போராடிய எழுபது பெற்றோர் உயிரிழந்துள்ளனர். 2009 மே மாதம் இறுதி யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அரசின் பொய் வாக்குறுதிகளை நம்பி இராணுவத்தினரிடம் எமது உறவுகளைக் கையளித்தோம். வேறு சிலர் எமது முன்னிலையில் இராணுவத்திடம் தாமாகவே சரணடைந்தார்கள். சிலர் இராணுவத்தால் விசாரணைக்கு என கூட்டிச் செல்லப்பட்டனர். வைத்தியசாலை யில் வைத்தியம் செய்து கொண்டிருந்த போதும் கூட்டிச் செல்லப்பட்டனர். இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வெள்ளை வான் மூலமாகவும் இனம் தெரியாதவர்கள் மூலமாகவும் பலர் கடத்தப்பட்டனர்.

இவர்களைத் தேடிப் போராடிய எமக்கு முன்னைய ஜனாதிபதி மைத்திரிபாலவினால் எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதி அளிக்கப்பட்டது. பின் தனது உறுதிமொழியை நிறைவேற்றுவதில் இருந்து அவர் பின்வாங்கினார்.

எமது கோரிக்கைக்கு தீர்வை தராத இலங்கை அரசிடம் நீதி கேட்டு பயன் இல்லை என்பதால் கடந்த 16.11.2017 இல் இருந்து சர்வதேசத்திடம் இருந்து நீதி கேட்டு போராடி வருகின்றோம்.

சர்வதேச ஒத்துழைப்புடன் கொண்டு வரப்பட்ட ஐ.நாவின் தீர்மானம் 30/1 க்கு அமைவாக இலங்கை அரசால் கலந்தாலோசனை செயலணி அமைக்கப்பட்டது. ஆனால் அதன் பரிந்துரைகளை உள்வாங்காது அமைக்கப்படும் நான்கு பொறிமுறைகளாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்குமா என்பதை ஐ.நா. கூட அறிய முயற்சிக்கவில்லை.

2018 மார்ச் மாதத்தில் இருந்து மனித உரிமை கூட்டத் தொடரில் பங்குபற்றி வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் காணாமல் போனோர் அலுவலகத்தின் இயலாமையை, அதில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் வெளிப்படுத்தி வருகின்றோம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்க முடியாத ஓ.எம்.பியை முற்று முழுதாக பாதிக்கப்பட்டவர்களாகிய நாம் நிராகரிப்பதாக கூறி வருகின்றோம். எனினும் இந்த செயலாற்றல் அந்த ஓ.எம்.பியை பாராட்டிக் கொண்டு நான்கு பொறிமுறைகளையும் அமுல்படுத்துவதற்காக கால நீடிப்பையும் ஐ.நா.வழங்கி கொண்டிருக்கின்றது.

ஓ.எம்.பி.ஆணையாளருடன் கடந்த 17.05.2019 இல் நாம் ஒரு சந்திப்பை ஏற்படுத்தி இருந்தோம். அதில் கலந்துரையாடியபடி ஓ.எம்.பியிடம் சாட்சியம் வலுவாக உள்ள ஐந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தரவுகளை 20.07.2019 இல் அனுப்பியிருந்தோம். ஆனால் அவர்களால் இற்றை வரை அதில் ஒன்றுக்கு கூட நீதியை வழங்கவோ குறைந்த பட்சம் விசாரணையையோ முன்னெடுக்க முடியவில்லை. இந்நிலையில் 03.03.2020 இல் ஓ.எம்.பியின் தலைவர் சாலிய பீரிஸ் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார். அதன்படி இரண்டு வருடம் முடிவுற்ற நிலையில் காணாமல் போனோரின் பட்டியல் ஒன்றை வெளியிட்டு அதை சரிபார்க்க முயற்சிக்கிறார்கள். மேலும் புதிய பொறிமுறை ஒன்றிற்கான தேவையையும் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நாவின் தீர்மானத்துக்கு அனுசரணை வழங்குவதாகக் கூறி கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் காலத்தைக் கடத்திய இலங்கை அரசு உள்ளகப் பொறிமுறை மூலம் மேலும் காலத்தை இழுத்தடிப்புச் செய்து காணாமல் போனோர் விவகாரத்தை நீத்துப்போகச் செய்யவே வழி வகுக்கின்றது.

எனவே ஐ.நாவானது இலங்கை அரசாங்கத்திடம் 30/1 தீர்மானத்தை நிறைவேற்றும்படி வலியுறுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற முடியாது.

எனவே இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துவதற்கு அல்லது விசேட தீர்ப்பாயம் ஒன்றில் விசாரணை செய்வதற்கு வசதியாக பரிந்துரை செய்து ஐ.நா.பாதுகாப்பு சபைக்கு பாரப்படுத்துமாறு தங்களை மன்றாட்டமாக கேட்டு நிற்கின்றோம்.(9)

## முல்லையில் கடையடைப்பு



(பனிக்கன்குளம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் சர்வதேச மகளிர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டித்தும் சர்வதேச விசாரணையை கோரியும் முல்லைத்தீவில் நேற்று மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு வர்த்தக சங்கம், புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம், உடையார்கட்டு வர்த்தக சங்கம், விசுவமடு வர்த்தக சங்கம், முள்ளியவளை வர்த்தக சங்கம், ஒட்டுசுட்டான் வர்த்தக சங்கம், மாங்குளம் வர்த்தக சங்கம், மல்லாவி வர்த்தக சங்கம் உட்பட்ட சங்கங்கள் ஆதரவு வழங்கி பூரண கடையடைப்பு முன்னெடுக்கப்பட்டது. (9-281)

## கொரோனா நீங்க வழிபாடு





(முறிகண்டி)

கொரோனா நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ள விசேட வழிபாடுகள் கிளிநொச்சி தும்மினி விகாரையில் இடம்பெற்றது.




கொரோனா நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டி வழிபாடுகள் நேற்று புத்த சாசன அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இராணுவ தலைமையக கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெயந்த குணரட்ன தலைமையில் இடம்பெற்றது.

முன்தினம் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு முழுவதும் இடம் பெற்றது.

வழிபாட்டில் கிளிநொச்சி பிரதேச செயலக செயலாளர்கள், மற்றும் அரச அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-100)

## வெடிபொருள் மீட்பு

(நெளுக்குளம்)

வவுனியா மரக்காரம்பளை பகுதியில் வீதியோரத்தில் செல்லொன்று விஷேட அதிரடி படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இன்று காலை மரக்காரம் பளை வீதிக்கு அண்மித்த பகுதி யில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதை அவதானித்த பொது மக்கள் ஈச்சங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

அந்த வகையில் மடுகந்தை விஷேட அதிரடிப் படையினர் செல்லை அவ்விடத்திலிருந்து அகற்றி செயலிழக்க செய்திருந்தனர்.

குறித்த இடத்திற்கு அண்மித்த பகுதியில் முன்பு இராணுவ முகாம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-299)

## விடுதித் திறப்புவிழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியின் ஆண்கள் மாணவர் விடுதித் திறப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் து.யேசுதானந்தர் தலைமையில் இடம்பெறவுள்ளது. வைத்திய கலாநிதி ஷிமல் ஜெரட்ணத்தின் நிதிப் பங்களிப்புடன் நிறைவு செய்யப்பட்ட குறித்த கட்டடத்தை வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் திறந்து வைக்கவுள்ளார். (9-10)

## தேசிய கலை இலக்கியப் போட்டிகள்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நடத்தப்படுகின்ற அரச சிறுவர் ஓவிய விழா, தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி, பிரதேச கலை இலக்கிய விழா, அரச ஓவிய சிற்ப விழா ஆகியவற்றுக்கான போட்டிகளுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

எனவே விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறாத பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள், கலைஞர்கள் மற்றும் துறை சார்ந்தவர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய சுற்று நிருபம் என்பனவற்றை பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாமென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (9)

## சர்வதேச மகளிர் தின நிகழ்வு






(முறிகண்டி)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வியர்வைத் துளிகள் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் மகளிர் தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றது. ஏ9 வீதியிலிருந்து கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபம் வரை கவனயீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டதை தொடர்ந்து பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கருத்துகளும் பரிமாறப்பட்டன. குறித்த நிகழ்வு இனங்களிற்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டதாக ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது. (9-100)

# காணாமல் போனோர் விவகாரம்! ஜனாதிபதியின் கருத்தை ஏற்க முடியாது

## சிறீதரன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

காணாமல் போனோர் விவகாரத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கருத்தினை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

குமாரசாமிபுரம் மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அங்கு கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இறுதி யுத்தத்தை வழி நடத்தியவர் தற்போது ஜனாதிபதியாக இருக்கிறார். அவரின் தலைமையின் கீழ் இருந்த படையினரிடமே எமது தாய்மார்கள் தங்களது பிள்ளைகளையும் கணவன்மாரை மனைவியரும் கையளித்து இருந்தனர். அவர்கள் கண் கண்ட சாட்சியங்கள் யுத்தம் நிறைவுற்றதன் பின்னர் ஒப்படைத்த பிள்ளைகளையே நாம் கேட்கிறோம். இவரிடம் ஒப்படைத்தவர்களையே கேட்கிறோம்.



தமிழர்களுக்கு பொருளாதார ரீதியில் தான் பிரச்சினை இருப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். தமிழர்கள் இந்த மண்ணிலே உரிமை வேண்டியே போராடிக்கொண்டிருக்கிறோம். இதற்காகவே எமது மாவீரர்கள் இரவு பகல் பாராது களங்களில் சமராடி வீரகாவியமானார்கள். 1983 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரத்தை தீர்மானிப்பவர்களாக தமிழர்களே இருந்தார்கள். அவர்களின் பொருளாதாரத்தை முடக்கி எங்களின் பொருளாதார நிலையங்களை எரியூட்டி எங்களின் பொருளா தாரத்தை முடக்கியவர்கள் சிங்கள ஆட்சியாளர்களே. எமக்கான உரிமைகள் கிடைக்கப்பெற்றால் சுயமாகவே நாம் பொருளாதார ரீதியில் மேலெழும்புவோம். எங்களின் பொருளாதாரங்களை மேம்படுத்தும் இடங்களை இராணுவம் கைப்பற்றி சூறையாடிக் கொண்டிருக்கிறது. வட்டக்கச்சி பண்ணை தொடக்கம் கஜு தோட்டங்கள், கடல் வளங்கள் சூறையாடப்படுகின்றன. இராணுவத்தினரால் விலைக்கட்டுப்பாடின்றி நடத்தப்படும் அழககங்கள் இவ்வாறாக எமது வளங்களை கையகப்படுத்தியிருக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (9)

## ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் (மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், உழவு இயந்திரங்கள், உழவு இயந்திரப் பெட்டிகள், கையுழவியந்திரப் பெட்டிகள், பட்டா வாகனங்கள்) பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது. (9)




# சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிகமாக இடம்பெறும் மணற் கொள்ளை, மரக்கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முக்கிய மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான விசேட கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கடந்த வாரம் அன்று மணற்கொள்ளையர்களால் அச்சுறுத்தப்பட்ட சபை உறுப்பினர்கள், சபையில் அன்றைய தினத்தில் இடம்பெற்ற அச்சுறுத்தல் தொடர்பில் விளக்கமளித்தனர்.

அத்துடன் ஏனைய சபை உறுப்பினர்களாலும் இது போன்ற பல சட்டவிரோத செயற்பாடுகள் புதுக்குடியிருப்புப் பிரதேசசபை எல்லைக்குள் இடம்பெறுவதாகவும், அச்சுறுத்த நிலைமைகளும் இருப்பதாகவும் சபையில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை சபை அமர்வுகளில் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதும், அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் சில உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன.

இவற்றினையடுத்து புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் முக்கிய மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதாவது, புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள், அவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களினால் ஏற்படும் அச்சுறுத்தல்களை, செயற்பாடுகளை கட்டுப்படுத்தக்கோரி உரிய அதிகாரிகளுக்கு கடிதங்களை அனுப்பி வைத்தல்.

அதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேசசபைப் பிரிவுக்குட்பட்ட மாங்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை அழைத்து சட்டவிரோத செயற் பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையடுதல்.

இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளில் உரியவர்கள் கவனம் செலுத்தாத பட்சத்தில் சபை உறுப்பினர்கள் இணைந்து மாபெரும் போராட்டங்களை முன்னெடுத்தல் ஆகிய மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. (9)

# கனரக வாகனம் விபத்து போக்குவரத்து பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் ஏ9 வீதிக்கு குறுக்காக கனகரக வாகனம் தடம்புரண்டு நேற்று விபத்துக்குள்ளாகியதில் அப்பகுதியில் வீதிப்போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பொருட்களை ஏற்றிச் சென்ற கனரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்ட நிலையில் குறித்த வாகனத்தின் சாரதி சிறு காயத்துடன் உயிர் தப்பியுள்ளார்.

இவ்விபத்தின் காரணமாக கனரக வாகனத்திலிருந்து பொருட்கள் வீதியெங்கும் சிதறியதால் சில மணிநேரம் போக்குவரத்து பாதிப்படைந்தது. இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் முன்னெடுத்தனர். (9-250)

# "அனைவரும் சமம்" மகளிர் தின நிகழ்வு வவுனியாவில்

(வவுனியா)

வட மாகாண மகளிர் விவகாரம் புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், சிறு கைத்தொழில் மற்றும் கூட்டுறவு அமைச்சு மற்றும் வவுனியா மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தினம் நாளை காலை 9.30 மணிக்கு வவுனியா மாவட்டத்தின் நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில் வடமாகாணத் தில் சிறிய, நடுத்தர கைத்தொழில் முயற்சியில் ஈடுபடும் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் களில் சமூக மட்ட மற்றும் தனி நபர்கள் இடையேயான தெரிவில் சாதனையாளர்களாக திகழும் பெண்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இவர்களை மேலும் ஊக்கப்படுத்துவதற்காக இவர்களினால் மேற்கொள்ளப்படும் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடமானது மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது. (9)

# நாச்சிக்குடா மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு

## அமைச்சர் டக்ளஸ்

(நாச்சிக்குடா)

நாச்சிக்குடா புனித யாகப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கமும் அதனைச் சூழ வாழும் மக்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் தீர்வு பெற்றுத்தருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாச்சிக்குடா புனித யாகப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் குறித்த சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சங்கத் தலைவரால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பாக வாடி அமைத்தல், வெளிச்ச வீடு அமைத்தல், வான் தோண்டுதல், சங்கத்திற்குரிய காணிக்கான உரித்தை பெற்றுக் கொள்ளல், மின்சார இணைப்பு, எரிபொருள் நிரப்பு நிலையம் போன்ற அவசியமான கோரிக்கைகளும் இருக்கின்றன.

இவை ஒவ்வொன்றும் தீர்க்கப்படவேண்டிய விடயங்கள்தான். எளிதாக தீர்வுகாணவும் முடியும். கடந்த நல்லாட்சி காலத்தில் இவை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருக்கலாம்.

ஆனாலும் அன்று நல்லாட்சி என்று கூறிய அரசுக்கு ஆதரவு கொடுத்திருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இவற்றுக்கெல்லாம் தீர்வுகண்டு கொடுக்காதிருந்தது ஏன் என்பதே கேள்வி.

ஆனாலும் உங்களது வாழ்வாதாரத்துக்கான பொருளாதார ஈட்டலை அதிகரிப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது இந்த முயற்சிகள் மேலும் வெற்றிபெற வரவுள்ள தேர்தலை மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு உங்களது ஆதரவுப்பலம் எமக்கு கிடைக்குமானால் இவ்வாறான பிரச்சினைகள் மட்டுமல்லாது தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அதிகமான பிரச்சினைகளுக்கும் முழுமையான தீர்வை எம்மால் பெற்றுத்தர முடியும் என மேலும் தெரிவித்தார். (9)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டத்தின்கீழ், கிளிநொச்சி மாவட்டம் கறுக்காய்தீவு மகா வித்தியாலயத்தில் இருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, பொருளாதார நலிவான குடும்பங்களைச் சேர்ந்த 25 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பன அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

# பாரதம்

## கொரோனா வைரஸ் தாக்கம் இத்தாலியில் 233 பேர் பலி



(ரோம்)

உலகத்தை அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸுக்கு சீனாவுக்கு அடுத்தபடியாக இத்தாலியில் அதிகமான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இதுவரை இத்தாலியில் 233 பேர் கொரோனா வைரஸால் உயிரிழுந்தனர் என்றும் 5,833 பேர் பாதிக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனா, தென் கொரியாவுக்கு அடுத்தபடியாக அதிகமான பாதிப்பும், உயிரிழப்பும் இத்தாலியில் நிகழ்ந்துள்ளது. இதனையடுத்து, இத்தாலியின் லோம்பர்டு பிராந்தியம் மற்றும் 14 மாகாணங்களில் வசிக்கும் சுமார் 16 மில்லியன் மக்களை தனிமைப்படுத்த இத்தாலி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும், இத்தாலி முழுவதும் சினிமா தியேட்டர், நாடக அரங்கம், அருங்காட்சியகம் ஆகியவற்றை மறு அறிவிப்பு வரும் வரை மூட அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

சீனாவைக் கதிகலங்க வைத்து வரும் கொரோனா வைரஸ் தாக்கம் இதுவரை 91 நாடுகளுக்கு பரவியுள்ளது. சீனாவின் வுஹான் நகரில் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸுக்கு இதுவரை 3,400 பேர் உயிரிழுந்தனர். இதேவேளை இந்த வைரஸினால் உலகம் முழுவதும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இத்தாலியில் 233 பேர் கொரோனா வைரஸால் உயிரிழுந்தனர். 5,833 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தீவிர மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்கள் எண்ணிக்கை 462 லிருந்து 567 ஆக அதிகரித்துள்ளது என்றும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாலி பிரதமர் கான்டோ இந்த கொரோனா வைரஸ் பணக்காரர்கள் அதிகமாக வாழும் வடக்குப் பகுதியிலிருந்து, ஏழைகள் அதிகமாக வாழும் தெற்குப்பகுதிக்கு பரவுகிறதா என்று தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

இத்தாலியில் உள்ள 22 மண்டலங்களில் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ரோம் நகரை உள்ளடக்கிய லாஜியா பிராந்தியம், பாரி நகரை உள்ளடக்கிய புக்லியா பிராந்தியம் ஆகியவற்றில் நேற்று தலா ஒருவர் உயிரிழந்தனர். (ஜ-2)

## நாளுக்கு நாள் உயிரைக் பலி எண்ணிக்கை 30

(பீஜிங்)

**சீனாவில் கொரோனா வைரஸ் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 3097 ஆக அதிகரித்துள்ளது.**

சீனாவில் ஹுபெய் மாகாணம் வுஹான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ் 31 மாகாணங்களுக்கு வேகமாகப் பரவியது. இந்த வைரஸால் தினமும் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கொரோனாவை கட்டுப்படுத்த முடியாததால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் கூடிக்கொண்டே சென்றது. சில நாட்களுக்கு முன்பு பலி எண்ணிக்கை 2 ஆயிரத்து 500 ஐ தாண்டியது. நேற்று முன்தினம் 28 பேர் கொரோனாவால் உயிரிழந்தனர்.

இதனால் சீனாவில் கொரோனா வைரசுக்கு பலியானோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 70 ஆக உயர்ந்தது. நேற்று முன்தினம் புதிதாக 99 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு உள்ளவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை தாண்டியுள்ளது.

## கொரோனா வைரஸ் எதிரொலி தாஜ்மஹாலை மூட வலியுறுத்து

(டில்லி)

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆக்ரா நவீன் ஜெயின் மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பினார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ள அவர், "கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் இருக்க தாஜ்மஹால் மற்றும் நாடு முழுவதும் உள்ள முக்கியமான தொல்பொருள் மற்றும் கலாசார தலங்களை தற்காலிகமாக மூட வேண்டும்.



தினமும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் இந்த இடங்களை பார்வையிடுகின்றனர். சீனாவுக்கு வெளியே இந்த வைரஸ் வேகமாக பரவி வருகிறது. நம் நாட்டில் நிலைவரம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்றாலும் நாம் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், அதனை கட்டுப்படுத்துவதற்காக அதிகளவு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் இடமான தாஜ்மஹாலை தற்காலிகமாக மூடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ஆப்கானிஸ்தானில் அ தீவிரவாதத் தாக்கு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில், அரசியல் பேரணியில் ஒன்றில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் 27 பேர் உயிரிழுந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் பலர் காயமடைந்துள்ள நிலையில் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

நிபந்தனைகளின் அடிப்படையில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுவதற்கான சமாதான ஒப்பந்தத்தில் ஆப்கானிஸ்தானும் அமெரிக்காவும் கையெழுத்திட்டு சில நாட்களே ஆன நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்றது.



### கொரோனா வைரஸ் தாக்கம்

## தமிழகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கண்காணிப்பில்

(சென்னை)

கொரோனா அச்சுறுத்தல் எதிரொலியாக பல்வேறு நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வருகை தந்த 1080 பேரின் உடல்நிலை கண்காணிக்கப்பட்டு வருவதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் எதிரொலியாக சென்னை, கோவை, திருச்சி, மதுரை உள்ளிட்ட விமான நிலையங்களில் அனைத்து பயணிகளும் தெர்மல் ஸ்கிரினிங் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்வரை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 106 பேர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

இவற்றில் 60 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவற்றில் 56 நபர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 4 பேரில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் மூன்று பேரின் பரிசோதனை நிறைவடையவில்லை எனவும் சுகாதாரத்துறை கூறியுள்ளது. (ஜ-2)


## கொரோனாவால் தனிமைப் இடிந்து வீழ்ந்ததில் ந

### 70 பேர் இடிபாடுகளுக்குள்



# வெளிநாடு

## ரைக் குடிக்கும் கொரோனா 3097 ஆக அதிகரிப்பு



இந்நிலையில், சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பால் மேலும் 27 பேர் பலியாகியுள்ளனர். இதையடுத்து பலியானோர் எண்ணிக்கை 3,097 ஆக அதிகரித்துள்ளது.

சீனாவில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 80,651 லிருந்து 80,696 ஆக உயர்ந்துள்ளது. சீனாவில் கொரோனா வைரஸ் பரவுவது ஓரளவு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. ஆனாலும், வைரஸ் பாதிப்பால் பலியானோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணமே உள்ளது. (ஜ-2)

## ஆட்சிக் கவிழ்ப்பு குற்றச்சாட்டு இளவரசர்களிடம் விசாரணை



(ரியாத்)

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் சவுதி அரேபியா மன்னரின் இளைய சகோதரர் உள்ளிட்ட அந்நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்கள் 3 பேரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சவுதி அரேபிய நாட்டின் மன்னர் சல்மானின் இளைய சகோதரரான இளவரசர் அகமது பின் அப்துல் அஸிஸ், முன்னாள் பட்டத்து இளவரசர் முகமது பின் நயீப் மற்றும் அரச குடும்பத்தை சேர்ந்த உறவினர் இளவரசர் நவாஃப் பின் நயீப் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

விசாரணைக்கான காரணம் குறித்து உத்தியோகபூர்வமான அறிவிப்புகள் வெளியிடப்படவில்லை என்றாலும் அவர்கள் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின்கீழ் 3 இளவரசர்களிடமும் கடந்த சனிக்கிழமை முதல் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக "த வோல்ஸ்ட்ரீட் ஜர்னல்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளையில், இந்த கைது நடவடிக்கைக்கும் சவுதி இளவரசர் முகமது பின் சல்மானுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது. அவர்கள் தனியிடத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேபோன்று, கடந்த 2017 ஆம் ஆண்டு முகமது பின் சல்மானின் உத்தரவின் பேரில் சவுதி அரச குடும்பத்தை சேர்ந்தவர்கள், அமைச்சர்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோர் ரியாத்தில் உள்ள சொகுசு விடுதி ஒன்றில் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களிடம் அப்போது விசாரணையும் நடத்தப்பட்டது.

2017ஆம் ஆண்டு முகமது பின் சல்மானால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட இளவரசர் முகமது பின் நயீப் சவுதி அரேபியாவின் உள்துறை அமைச்சராக இருந்துள்ளார்.

சவுதி அரேபியாவின் இளவரசராக கடந்த 2016ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது முதல் அந்நாட்டின் அறிவிக்கப்படாத ஆட்சியாளர் போன்று முகமது பின் சல்மான் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ் அரசியல் பேரணியில் ்குதல்; 27 பேர் பலி



1995இல் ஒரு மோசமான உள்நாட்டுப் போரில் மசாரி உள்ளிட்ட முஜாஹிதீன் குழுக்களிடையே ஏற்பட்ட போரின் போது ஹசாரஸின் தலைவரான அப்துல் அலி மசாரி கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்ட 25 ஆம் ஆண்டின் நினைவாக ஷியா பிரிவு மக்கள் காபூல் அருகேயுள்ள டாஷ்-இ-பார்ச்சி பகுதியில் ஒரு நினைவுச் சின்னம் அமைத்தனர். இந்நிலையில், ஷியா பிரிவு அரசியல் தலைவர் அப்துல் அலி மாசியின் நினைவுப் பேரணி நடைபெற்ற போதே இந்தத் தாக்குதல் நடைபெற்றது. இந்தத் தீவிரவாத சம்பவத்திற்கு தலிபான்கள் பொறுப்பேற்க மறுத்துவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஜ)

## கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பது குறித்து மத்திய அமைச்சர்களுடன் மோடி முக்கிய ஆராய்வு



(டில்லி)

உலகம் முழுவதும் படு வேகமாகப் பரவிவரும் கொரோனா வைரஸ் பாதிப்பைத் தடுக்க மத்திய அரசு செய்துள்ள முன்னேற்பாடுகள் குறித்து பிரதமர் மோடி மத்திய அமைச்சர்களுடன் கலந்துரையாடினார்.

இந்தியாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை 34 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் மத்திய அரசின் உயர்மட்ட ஆலோசனை இடம்பெற்றுள்ளதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ்வர்தன், இணை அமைச்சர் அஷ்வினி குமார் சவுபே, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத், மத்திய சுகாதாரத் துறை செயலாளர் பிரித்தி சூடன், மத்திய அமைச்சரவைச் செயலாளர் ராஜிவ் கவுபா, உள்துறை, உள்நாட்டு விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, தேசிய பேரிடர் மேலாண்மை ஆகிய முக்கிய துறைகளின் முதன்மைச் செயலாளர்கள் இன்றைய ஆராய்வுக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்நோய், மேலும் அதிமாகப் பரவிடாத வகையில் வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கு நடத்தப்படும் பரிசோதனைகள், தனிமைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என மத்திய அமைச்சர்களிடம் மோடி அறிவுறுத்தினார்.

அத்துடன், கொரோனா வைரஸ் மேலும் பரவாமல் தடுப்பதற்காகவும் அதனை முற்றாக ஒழிப்பதற்காகவும் உலக நாடுகள் கடைப்பிடித்துவரும் நடைமுறைகளைக் கண்டறிந்து அவற்றைச் சார்ந்த வகையில் செயற்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டும் என பிரதமர் வலியுறுத்தினார். (ஜ-2)

## மைப்படுத்தப்பட்ட ஹோட்டல் ல் நால்வர் உயிரிழப்பு

(பீஜிங்)

தென்கிழக்கு சீனத் துறைமுக நகரமான குவான்ஜோவில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட ஹோட்டல் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின்போது சுமார் 70 பேர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதாகவும் அதில் 4 பேர் உயிரிழந்ததாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

சுமார் 5 மாடிகள் கொண்ட கட்டடமே இடிந்து வீழ்ந்ததாகவும் இந்நிலையில் நேற்று இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களில் 47 பேரை பாதுகாப்பாக மீட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் தற்போது மீட்புப் பணியாளர்கள் இடிபாடுகளில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

இருப்பினும் கட்டடம் இடிந்து வீழ்ந்தமைக்கான காரணம் தொடர்பாக எவ்வித தகவல்களும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## திருட்டு மின்சாரத்தில் நாய்களுக்கு ஏசி 7 இலட்சம் ரூபாய் அபராதம் செலுத்திய நபர்

(டில்லி)

மகாராஷ்டிரா மாநிலம், தானே மாவட்டத்தில் செல்லமாக வளர்க்கும் நாய்களுக்காக திருட்டு மின்சாரம் மூலம் 24 மணி நேரமும் ஏ.சி.வசதி செய்தவருக்கு 7 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

மகாராஷ்டிரா மாநிலத்தின் தானே மாவட்டத்தை சேர்ந்த ஒருவர் பலவகையான விலையுயர்ந்த நாய்களை செல்லப்பிராணிகளாக வளர்த்து வருகிறார். இவை வெயிலின் வெம்மையில் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, தனது வீட்டின் மின் அளவீட்டுக் கருவியின் கண்ணை மறைத்து, தனியாக ஒரு வயறின் மூலம் திருட்டுத்தனமாக மின்சாரத்தை கடத்தி நாய்கள் இருக்கும் அறைக்குள் 24 மணி நேரமும் குளிர்சாதன இயந்திரங்கள் இயங்குமாறு வசதிப்படுத்திக் கொடுத்திருந்தார்.

இதை நோட்டமிட்ட சிலர் மின்சார வாரியத்தை சேர்ந்த உள்ளூர் அதிகாரிகளுக்கு இரகசியமாக தகவல் அளித்தனர். அவர்கள் வந்த அந்நபரின் வீட்டை சோதனையிட்டபோது நாய்கள் சொகுசாக வாழ்வதற்காக அவர் 34 ஆயிரத்து 465 யூனிட் மின்சாரத்தை திருடியது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த திருட்டுக்காக அந்நபரிடம் இருந்து மின்சார கட்டணம் மற்றும் அபராதமாக 7 லட்சம் ரூபாய் பெறப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ-2)

# வேலையில்லாப் பட்டதாரிகளை அரசாங்கம் ஏமாற்றுகிறது

## பட்டதாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பை வழங்குவதாக கூறி, அரசாங்கம் தொடர்ந்தும் ஏமாற்றி வருவதாக வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

எனவே அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டுக்கு, எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுக்கவுள்ளதாக அச்சங்கம் எச்சரிக்கை விடுத்தது.

இவ்விடயம் தொடர்பாக வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தென்னே ஞானானந்த தேரர் தெரிவித்துள்ளதாவது, "வேலையில்லாப் பட்டதாரிகளுடைய நியமனக் கடிதம் தொடர்பான பிரச்சினை பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

ஏனெனில் நாடாளு மன்றம் கலைக்கப்படும் காலப் பகுதியில் அரசாங்கம் வேலை யில்லாப் பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பை வழங்கு வதாக கூறி நியமனக் கடிதங் களை அனுப்பி வைத்துள்ளது. ஆனால் தேர்தல் காலம் என்ப தால் இதனை தேர்தல்கள் ஆணையாளர் தற்காலிகமாக இடை நிறுத்துமாறு வலியுறுத்தினார். மேலும் தற்போதைய அரசாங்கம், ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக தேர்தல் மேடைகளில் வேலையில்லாப் பட்டதாரிகளுககான வேலைவாய்ப்பை ஜனவரி மாதம் முதலாம் திகதியில் வழங்குவதாக அறிவித்திருந்தது. அத்துடன் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வாக்குறுதியளித்ததைப் போன்று நியமனங்களை வழங்காமல் காலம் கடத்தும் நடவடிக்கைகளை புதிய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# சஜின் வாஸ் குணவர்த்தன வேட்புமனு தாக்கல் செய்ய


## நீதிமன்றம் அனுமதி



(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்த்தன, தனது வேட்பு மனுக்களை எதிர்வரும் 12 முதல் 19 வரை கட்சிகளுக்கு சமர்ப்பிக்க வசதியேற்படுத்திக் கொடுக்க வெலிக்கடை சிறைக் கண்காணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சஜின் டி வாஸ் குணவர்த்தன போட்டியிடவுள்ளார். இந்நிலையில் , அவர் வேட்பு மனுத்தாக்கல் செய்ய அனுமதிக்குமாறு சட்டத்தரணி ஜீவந்த ஜெயதிலக விடுத்த கோரிக்கையை ஏற்று நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது. பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் சஜின் டி வாஸ் குணவர்த்தன மீது குற்றம் சுமத்தப்பட்டது. சாட்சிகளில் செல்வாக்கு செலுத்தியதாக புகார் எழுந்ததைத் தொடர்ந்து சந்தேகநபர் சஜின் டி வாஸ் குணவர்த்தனவை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உயர் நீதிமன்ற நீதிபதி கிஹான் கலதுங்க உத்தரவிட்டார். (ஐ)

# 1871 ஆம் ஆண்டு மூழ்கிய கப்பலின் நங்கூரம் இலங்கைக் கடலில் கண்டுபிடிப்பு





(கொழும்பு)

1871ஆம் ஆண்டில் காலி கடற்பரப்பில் மூழ்கிய கப்பலின் நங்கூரமொன்றை அடையாளம் கண்டுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் கடல் தொல்பொருள் பிரிவு தெரிவித்துள்ளது. நங்கூரம் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

காலி துறைமுகத்தில் 13 மூழ்கிய கப்பல்கள் உட்பட 26 தொல்பொருள் இடங்கள் உள்ளன என்று அந்தப் பிரிவின் அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். காலி துறைமுகத்திலிருந்து 1871, நவம்பர் 1 அன்று அவுஸ்திரேலியாவின் சிட்னிக்கு பயணம் செய்தபோது இந்தக் கப்பல் விபத்திற்குள்ளானது.

1863 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட ரங்கூன் என்ற கப்பலே கடலில் மூழ்கியது. காலி துறைமுகத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள பாறைக்கு அருகே கப்பல் மோதியதாக கடல் தொல்பொருள் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். இது ஒரு அஞ்சல் கப்பலாக பயன்படுத்தப்பட்டது. கப்பல் மூழ்கும்போது, அஞ்சல் பைகள் உட்பட பல பொருட்கள் இருந்தன.

பொதுவாக, சர்வதேச கடல் வரைபடங்கள் ஒரு கப்பல் எங்கு மூழ்கியது என்பது குறிப்பிடப்படும்.

அண்மையில் ரங்கூனை அடையாளம் கண்டபோதும், இது இன்னும் சர்வதேச கடல் வரைபடங்களில் குறிப்பிடப்படவில்லை. அண்மையில் அந்த பகுதியில் நங்கூரமிட்ட கப்பலொன்று, ரங்கூனின் நங்கூரத்துடன் மோதி சேதமடைந்துள்ளது. விரைவில் அந்தப் பகுதி சர்வதேச கடல் வரைபடத்தில் குறிப்பிடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இன்னும் இருக்கிறது!

என்னுடைய நண்பர் ஒருத்தர். அவருக்கு ஜாதகத்திலே நம்பிக்கையுண்டு. அவரே ஜோதிடம் பார்ப்பார். என்ன சேர்... இந்தக் காலத்திலே இதையெல்லாம் நம்பிக் கொண்டிருக்கிறீர்களே... என்று கேட்டால் "உங்களுக்கு ஒன்றும் தெரியாது சேர். இந்த உலகத்திலே ஒவ்வொருத்தரும் அவரவர் செய்கின்ற நல்லது கெட்டதுக்கு தகுந்த பலனை அனுபவித்தே ஆகவேண்டும்!" என்பார்.

"அதுமட்டுமல்ல... ஒருத்தன் இறந்துவிட்டால் கூட அவன் செய்த பாவ புண்ணியங்கள் கூடவே போய்க் கொண்டிருக்கும்!" என்பார். அது எப்படி கூட போகும்? என்று குதர்க்கமாக கேட்டேன். அதற்கு அவர் ஒரு கதை சொன்னார். அது மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. அதை இப்போது உங்களுக்குச் சொல்கிறேன்.

ஒரு ஊரிலே ஒருத்தர் இருந்தார். அவர் ஜோதிடம் பார்ப்பதில் மிகவும் கெட்டிக்காரர். ஒருத்தருடைய தலைமுடியை மட்டும். அவரிடம் காட்டினால் போதும் அதை மட்டும் பார்த்துவிட்டு அவருடைய ஜாதகத்தையே ஆராய்ந்து விடுவார். அப்பேற்பட்ட திறமை!

அந்த ஆள் ஒரு சமயம் கன்னியாகுமாரி கடற்கரைக்கு போயிருந்தார். அங்கே கரை ஓரமாக ஒரு மண்டையோடு கிடந்தது. அதை எடுத்துப் பார்த்திருக்கின்றார். அந்த மண்டையோட்டை வைத்துக் கொண்டு அதனுடைய ஜாதகத்தை ஆராய்ந்தார். "இந்த மண்டை ஓட்டிற்குரிய ஆசாமி வாழ்க்கையிலே மிகவும் கஷ்டப்பட்டிருக்கின்றான்... நிறைய கஷ்டத்தை அனுபவித்திருக்கின்றான். அது தாங்க முடியாமல் தான் கடலில் விழுந்து தற்கொலை செய்திருக்கிறான்!" என்பதை அவர் கணித்துவிட்டார். இருந்தாலும் இந்த மண்டையோடு இன்னும் அனுபவிக்க வேண்டியது மீதம் இருக்கின்றதை அவர் உணர்ந்தார். அதுசரி... ஒருத்தன் உயிருடன் இருக்கின்றவரைக்கும் தானே நல்லது கெட்டதை அனுபவிக்க முடியும்? இறந்ததன் பின் மீதமிருக்கும் என்றால் எப்படி அனுபவிக்கின்றது? இந்த மண்டை ஓட்டிற்கு "இன்னும் கொஞ்சம் மீதமிருக்கு" என்பது அவருக்கு புரிந்ததே தவிர... அதனுடைய அர்த்தம் என்ன என்பது சரியாக விளங்கவில்லை!

சரி... இதை இன்னும் விபரமாக ஆராய்ந்து பண்ணுவோம் என்று நினைத்துக் கொண்டு அதை தன்னுடைய வீட்டிற்கே எடுத்துக்கொண்டு போய்விட்டார். அந்த மண்டை ஓட்டை ஒரு பெட்டியிலே வைத்துப் பூட்டினார். தன்னுடைய தனியறையிலே அதைப் பத்திரமாக வைத்துவிட்டார். தினமும் இரவானதும் தன்னுடைய மனைவியைப் பார்த்து நீ பூஜை அறையிலே தனியாக படுத்துக் கொள்!" என்று சொல்லிவிட்டு... தினமும் இரவு 12 மணிக்கு பெட்டியைத் திறந்து அவர் பார்ப்பார். மண்டையோடு அப்படியே இருந்ததே தவிர 'இன்னும் கொஞ்சம் மீதமிருக்கு என்பதற்கு அர்த்தம் அவருக்கு விளங்கவில்லை! அந்த மண்டையோட்டுக்கு இன்னும் என்ன மீதமிருக்கப் போகுது?

இப்படியே ஒரு பத்து நாள் போய்விட்டது! அந்த வீட்டம்மாவுக்கு சந்தேகம் வந்துவிட்டது! நம்ம வீட்டுக்காரர் நம்மளைத் தனியாக ஏன் தூங்கச் சொல்கிறார்? என்ற சந்தேகம்! உடனே பக்கத்து வீட்டம்மாவிடம் விடயத்தைச் சொன்னார்கள்... அந்த அம்மா உடனே "நீ கவலைப்படாதே நான் கண்டுபிடித்துச் சொல்கிறேன்!" அன்று இரவே ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தார். இந்த ஆள் மண்டையோட்டை கையிலே வைத்துக் கொண்டு திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்துவிட்டது.

மறுநாள் காலையிலே அவரோட மனைவியைப் பார்த்தார்கள். ஏம்மா? உன் வீட்டுக்காரருக்கு நீ முதல் மனைவியா? இரண்டாவது மனைவியா? என்று கேட்டார்கள். எனக்குத் தெரிந்த வரைக்கும் நான் ஒருத்தி தான் அவருடைய மனைவி! என்று சொன்னார் அவர். அப்படி இல்லை. நீ அவருக்கு இரண்டாவது மனைவி... முதல் மனைவியின் மண்டையோட்டைத் தான் அவர் தினமும் இரவு எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அப்படி என்றார் அடுத்த வீட்டம்மா!

அப்படியா விடயம் என்று சொல்லிவிட்டு கணவன் வீட்டிலே இல்லாத நேரமாக பார்த்து அந்த மண்டையோட்டை எடுத்துக் கொண்டுவந்து ஒரு உரலிலே வைத்து உலக்கையால் குத்தி நொறுக்க ஆரம்பித்தார். வெளியே போயிருந்த அந்த ஆள் அப்போது தான் உள்ளே நுழைந்தார். மண்டையோடு உலக்கையிடம் குத்து வாங்கிக் கொண்டிருந்தது! அது அனுபவிக்க வேண்டியது இன்னும் கொஞ்சம் மீதமிருக்கு என்பதன் அர்த்தம் எனக்கு இப்போது தான் புரிந்தது! என்றார் அவர்.

இந்தக் கதையிலேயிருந்து நாம் இன்னொரு நீதியையும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது நம் வீட்டைப் பற்றி நமக்குப் புரியாதது எல்லாம் அடுத்த வீட்டுக்காரர்களுக்கு நல்லா புரியும்!

# ரவி கருணாநாயக்கவைத் தேடி
# சி.ஐ.டியினர் வலைவீச்சு!

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடிகள் விவகாரத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவைக் கைதுசெய்வதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவு என்ற சி.ஐ.டியினர் நேற்றுமுன்தினம் அவரது வீட்டிற்குச் சென்றபோது அவர் அங்கிருக்கவில்லை. இந்நிலையில் அவரைத் தேடும் நடவடிக்கைகளை சி.ஐ.டியினர் தீவிரப் படுத்தியுள்ளனர்.**

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவத்தின் முன்னாள் தலைவர் அர்ஜுன் அலோசியஸ் உட்பட 10 சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் கடந்த 6 ஆம் திகதி சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டது.

கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி மற்றும் மார்ச் 31 ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறிகள் ஏலத்தின் போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால், கோட்டை நீதவான் நீதிமன்றில் கடந்த புதனன்று புதிய வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலேயே, சி.ஐ.டியின் கோரிக்கைக்கு அமைவாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த ஏலத்தின் போது 51.98 பில்லியன் ரூபாய் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட நிலையில், அது தொடர்பில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 12 பேரை சி.ஐ.டி. சந்தேக நபர்களாக பெயரிட்ட நிலையில், அவர்களைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்குமாறும் கோரியது.

எனினும் அதில் 10 ஆவது சந்தேக நபராக பெயரிடப்பட்டிருந்த மத்திய வங்கி பொதுக் கடன் திணைக்களத்தின் முன்னாள் பிரதானி புத்திக சரத் சந்ரவுக்கு எதிராகப் பிடியாணையையோ அறிவித்தல் ஒன்றினையோ பிறப்பிக்கப் போதுமான காரணிகள் இல்லை என அதனை நிராகரித்த நீதிமன்றம், முதல் சந்தேக நபராகப் பெயரிடப்பட்ட பேர்ச்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத் தலைவரை அடுத்த வழக்குத் தவணையில் மன்றில் ஆஜராக அறிவித்தல் பிறப்பித்தது.




இதனால் ஏனைய 10 சந்தேக நபர்களையும் கைது செய்ய பிடியாணை பிறப்பித்து கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

அதன்படி பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் பணிப்பாளர் முத்துராஜ் சுரேந்திரன் குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் ரவி கருணாநாயக்கவை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை சி.ஐ.டியினர் முன்னெடுத்திருந்தனர்.

அதற்கமைவாக ரவி கருணாநாயக்கவை கைது செய்ய அவரின் பத்தரமுல்ல ரஜமல்வத்த பகுதியிலுள்ள வீட்டுக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சுமார் 45 நிமிடங்கள் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இருந்தபோதும் ரவி கருணாநாயக்க அந்த வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது. எவ்வாறெனினும் அவரைக் கைதுசெய்ய இரு சி.ஐ.டி. பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா திருப்பலி நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் காலி மறை மாவட்ட ஆயர் ரேமன் விக்கிரமசிங்க ஆண்டகை, யாழ்ப்பாணம் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார், இந்தியா சிவகங்கை மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை லூர்துராஜா, தஞ்சாவூர் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் மற்றும் இலங்கை இந்திய குருக்கள் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

# நாவற்குழியில் உப பொலிஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டியது அவசியம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழிப் பகுதியில் இடம்பெறுகின்ற சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நாவற்குழிப் பகுதியில் உப பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியம் காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர். அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தித் தேவைப்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர்கள் இக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர். இது தொடர்பாக மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாவற்குழிப் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு, கால் நடைத் திருட்டு உள்ளிட்ட பல சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் கேரதீவுப் பாலம் தொடக்கம் நாவற்குழிச் சந்தி வரையான ஏ-32 வீதியில் விபத்து உள்ளிட்ட பல அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றன. எனவே நாவற்குழிப் பகுதியில் ஏ-32 வீதியில் பொலிஸாருக்கென ஒதுக்கப்பட்ட அரச காணியில் உப பொலிஸ் நிலையம் அமைத்து சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கண்காணிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

மக்களின் கோரிக்கையையடுத்து நாவற்குழிப் பகுதியில் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கான அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு என்பன தொட ர்பாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்புமாறு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

உப பொலிஸ் நிலையம் அமைப்பதானால் குறைந்தது 20 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவை எனவும், தற்போதுள்ள நிலையில் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருவதாகவும் பொலிஸ் தரப்பினர் தெரிவித்தனர். (இ-30)

# ஊடகவியலாளர்களுக்காக 10 மில்லியன் காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்காக காப்புறுதித்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. 2020 அரிமஹ அமைப்பு, ஆசிய ஊடக மற்றும் கலாசார சங்கம், பெயார்வ்ஸ்ட் காப்புறுதி நிறுவனம் ஆகியன ஒன்றிணை ந்து இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன. இந்நிலையில் இது குறித்த நிகழ்வு கொழும்பு மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்தக் காப்புறுதி முறையின் கீழ் ஊடகவியலாளர்களுக்காக வருடத்தில் 985ரூபாய் செலுத்த வேண்டும். இதன்மூலம் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான உயிர் காப்புறுதி கிடைக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைய இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக 2020 அரிமஹ அமைப்பின் தலைவர் கனிஷ்க டி சில்வா தெரிவித்தார்.

இதில் உரையாற்றிய ஆசிய ஊடக மற்றும் கலாசார சங்கத் தலைவரும் ஊடகவியலாளருமான உபுல் ஜனக ஜெயசிங்க பல்வேறு தடைகளுக்கு மத்தியில் இதனை வெற்றிகொள்ள தமது சங்கத்தால் முடிந்திருப்பதாகத் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தின் ஊடகவியலாளர் அடையாள அட்டையை பெற்றுக் கொண்டுள்ளவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும். மேலும், 077 394 5325 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் தொடர்பு கொண்டு இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது. (இ-7)

# கோர விபத்தில் தாய்-மகள் பலி

(கொழும்பு)

நாத்தன்டிய - துன்கன்னாவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தாயும், மகளும் உயிரிழந்துள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் மோட்டார் சைக்கிள் மற்றும் சிறிய ரக லொறி ஒன்று மோதியமையால் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மீகஹக்கிவுல - வெலிபென்னகஹமுல பிரதேசத்தை ரவலங்கே சந்திரிக்கா சேனாரத்ன மெனிக்கே என்ற 54 வயதுடைய தாயும், அஹினசா துலாஞ்சலி என்ற 21 வயதுடைய யுவதியுமே உயிரிழந்தனர்.

உயிரிழந்த யுவதி பிபிலா தெனிய மத்திய மகா வித்தியாலயத்தில் சங்கீத ஆசிரியராக சேவை செய்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கொரோனா அச்சம்! சீனா மற்றும் சவுதிக்கான விமான சேவையை இரத்துச் செய்தது இலங்கை

(கொழும்பு)

உலகளவில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக சீனா மற்றும் சவுதி அரேபியாவிற்கான விமான சேவையை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தற்காலிகமாக நிறுத்தியது.

இதன்படி, சீனாவின் பீஜிங் சென்ஹாய் மற்றும் குவென்ஷோ ஆகிய நகரங்களுக்கான விமான சேவையை நாளை 10 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30ஆம் திகதி வரை தற்காலிகமாக இரத்துச் செய்வதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன், சவுதி அரேபியாவின் ஜேடாவுக்கான விமான சேவைகளை எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 30 ஆம் திகதி வரை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் கொரோனா தாக்கம் குறைவடைந்து நிலைமை வழமைக்குத் திரும்பினால் ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் விமான சேவையை முன்னெடுக்க முடியும் என ஸ்ரீலங்கன் விமான சேவை மேலும் தெரிவித்தது.

இதேவேளை, கொரோனா வைரஸின் உலகளாவிய தாக்கத்தால் இலங்கை உட்பட 6 நாடுகளுக்கான விமான சேவைகளை குவைத் தற்காலிகமாக இரத்துச் செய்தது.

இதன்படி குவைத் சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் இலங்கை, இந்தியா, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், சிரியா, லெபனான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கான விமானங்களுக்கே இவ்வாறு தற்காலிகமாகத் தடை விதிக்கப் பட்டது.


இதனிடையே, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாக்கவும், வைரஸை எதிர்கொள்ளவும் அரசாங்கம் சுகாதாரத் துறையுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

விமான நிலையங்கள், துறைமுகங்கள் உட்பட்ட பல்வேறு இடங்களில் விசேட பரிசோதனைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

15

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



விவசாயம் மற்றும் கால்நடை ஆகிய துறைகளை மேலும் வலுவூட்டக்கூடிய வகையில் நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தியும் முக்கிய பங்காற்றுவதை இவ்விடத்தில் கூறிவைக்க வேண்டியுள்ளது.

வட மாகாணத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டமான இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டமானது துரிதமாக புனரமைப்புச்செய்யப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எதிர்காலத்திலும் இவை அனைத்தும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமைவன என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

**கல்வித்துறையில் கவனம் தேவை-** வடமாகாணத்தில் கல்வித்துறையினை நோக்கும் போது பல்வேறு நிதிமூலங்களூடாக உட்கட்டுமான வசதிகள், நவீன தொழில்நுட்ப வசதிகளை உட்புகுத்தல், தளபாடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கல் மற்றும் கல்வித் துறைசார் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறு செயற்றிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் குறிப்பிடத்தக்களவில் ஆசிரியர் பற்றாக்குறையும் வருடாந்தம் நிவர்த்தி செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இருந்தாலும் வடமாகாணத்தின் கல்வி நிலையினை ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவைப்பாடு இன்றியமையாததாகவுள்ளது.

**சுகாதாரக்குறிகாட்டிகள் முன்னேற்றம்-** சுகாதாரத்துறையும் வடமாகாணத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றுகின்றது. 2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தினூடாக வைத்தியசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய சுகாதார நிலையங்கள் அபிவிருத்தி, மருத்துவர்கள் மற்றும் தாதிகளுக்கான விடுதிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களுக்கான உட்கட்டுமான அபிவிருத்திகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இம்மாகாணத்தின் சுகாதாரக் குறிகாட்டிகள் முன்னேற்றம் அடைந்திருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தில் வடமாகாணத்தின் சுகாதாரத்துறை மேம்பாட்டினை தொடர்ச்சியாகப் பேணும் வகையில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவன.

**7917 கிலோ மீற்றர் தூரமான வீதி புனரமைப்பு செய்ய வேண்டும்-** உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்புக்களுக்கூடாக வட மாகாணத்தின் வீதி அபிவிருத்திச் செயற்பாடுகளும் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இருப்பினும் வடமாகாணத்தில் காணப்படும் C மற்றும் D தரத்திலான 1,747.77 கிலோ மீற்றர் வீதிகள் புனரமைக்க வேண்டியிருப்பதுடன் 6,170.42 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளும் புனரமைக்கப்படவேண்டியுள்ளன. 2017 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்திப்பணிகள், கிராமியப்பாலங்கள் அமைத்தல் போன்றவற்றிற்கான ஐரோட் போன்ற புதிய முதலீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

**சுற்றுலாத்துறை, வீடமைப்பு போன்றவற்றுக்கு நிதி தேவை-** சுற்றுலாத்துறை, வீடமைப்பு போன்றவற்றுக்கான அதிக தேவைப்பாடுகள் காணப்படினும் எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிமூலம் சிறிய அளவிலானதான தேவைப்பாட்டினையே எம்மால் பூர்த்தி செய்ய முடிகின்றது. இவற்றிற்காக இனங்காட்டப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுப்பது இன்றியமையாததாகும்.

இனி விதிமுறையாக 2017 ஆம் ஆண்டிற்கான 4 ஆவது வரவு-செலவுத் திட்டத்தினை ஆராய்வோமாக

### 2017 ஆம் ஆண்டுக்கான நிதி.

வட மாகாணசபையில் ஒருங்கிணைந்த கட்டமைப்புக்கூடாக ஐந்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு-செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரங்கள் வருமாறு.

வட மாகாணசபைக்கு 2017 ஆம் ஆண்டுக்கு மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 19,321.73 மில்லியனும் மூலதன செலவினங்களுக்காக ரூபா 2,208.38 மில்லியனும் வெளிநாட்டு-உள்நாட்டு நிதியளிப்புகளுக்கூடான கருத்திட்டங்களுக்கு ரூபா 3,409.73 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மீண்டெழும் செலவின நிதியீட்டமாக மத்திய அரசின் தொகுதிக்கொடையிலிருந்து ரூபா 16,476.3 மில்லியனும் மத்திய அரச சேகரிப்பு நிதியிலிருந்து ரூபா 2,300.00 மில்லியனும் மாகாணசபை வருமான சேகரிப்பு நிதியிலிருந்து ரூபா 545.00 மில்லியனும் ஒதுக்கீடாக கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறாக ரூபா 19,321.73 மில்லியன் வடக்கு மாகாண சபையின் மீண்டெழும் செலவினங்களுக்காக 2017 ஆம் ஆண்டு பயன்படுத்தப்படும்.

மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,208.38 மில்லியனில் பிரமாண அடிப்படையிலான கொடையின் கீழ் ரூபா 551.2 மில்லியனும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கான நன்கொடையின் கீழ் ரூபா 1,657.18 மில்லியனும் ஒதுக்கீடாக கிடைக்கப்பெற்றுள்ளது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,657.18 மில்லியனில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ரூபா 788 மில்லியனும், சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ரூபா 737 மில்லியனும் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்காக ரூபா 120 மில்லியனும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட அவசிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 12.18 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு இணை நிதியளிப்புக்களுக்கூடான அபிவிருத்தித் திட்டங்களுக்கென அனுமதிக்கப்பட்ட தொகையில் பாடசாலைக்கல்வியை ஒரு அறிவு மையத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்றிட்டத்திற்காக ரூபா 315 மில்லியனும் சுகாதாரத்துறை அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூபா 360.0 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் வடக்கு வீதி இணைப்பு அபிவிருத்தித்திட்டத்திற்காக ரூபா 748.73 மில்லியனும் இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்திற்காக ரூபா 1,077 மில்லியனும் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர்விநியோகத்துக்கும், சுகாதார மேம்பாட்டு கருத்திட்டங்களுக்குமாக ரூபா 909 மில்லியனும் மத்திய அரசின் நேரடியான நிதி ஆளுகையினால் வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டுக்கு வட மாகாண சபையினால் கோரப்பட்ட நிதித்தேவையின் பிரகாரம் மீண்டெழும் செலவினத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதித்தேவை ரூபா 22,329.613 மில்லியன்களாக இருந்தபோதிலும் ரூபா 19,321.737 மில்லியன்களே இம்மாகாணத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகையாக கிடைக்கப்பெற்றுள்ளது. இது கோரப்பட்ட தொகையின் **86.5%** மட்டுமே ஆகும்.

இதேவேளை மூலதனச்செலவின் கீழ் மாகாண குறித்தொதுக்கப்பட்ட மூலதன நன்கொடையின் மூலம் ரூபா 10,672.48 மில்லியன் நிதித்தேவைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் ரூபா 1,657.18 மில்லியன்களே அனுமதிக்கப்பட்ட தொகையாக கிடைக்கப் பெற்றுள்ளது. அதாவது **16%** ஆன நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையினை பொறுத்தவரையில் 2016 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது **16%** ஆன நிதி 2017 ஆம் ஆண்டுக்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மாகாண சபை உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடு.

ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினருக்கும் 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடாக ரூபா 6 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இத்தொகையே 2017 ஆம் ஆண்டும் வழங்கப்படும்.

குறித்த 6 மில்லியன் ரூபாவில் ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்மொழிவுகளை 2017 ஆம் ஆண்டின் சித்திரை மாதத்திற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் திட்டங்களில் மாற்றங்கள் ஏதும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அம் மாற்றங்களுக்கான திட்டத்தினை ஆனி மாதத்தின் இறுதிப் பகுதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன் பின்னர் எந்தவிதமான திட்ட மாற்றங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. காரணம் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் 2016 ஆம் ஆண்டில் பல திணைக்களங்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் உறுப்பினர்களால் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படாது நிதி இருக்கும் பட்சத்தில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களால் என்னிடம் உதவி கோரி சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் பொருத்தமானவை தெரிவு செய்யப்பட்டு அந்நிதி அனைத்தும் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படும்.

மாகாண சபை உறுப்பினர்கள் தங்களுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடான ரூபா 6 மில்லியனை அதிகரித்துத் தருமாறு கோரிக்கை விடுத்ததன் பிரகாரம் அக்கோரிக்கை என்னால் ஆராயப்பட்டு வழங்கப்படவிருக்கின்ற ரூபா 6 மில்லியனுக்கு மேலதிகமாக தலா ஒரு மில்லியன் ரூபாவினை ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினருக்கும் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆனால் இதற்காக ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினரும் காத்திரமான ஒரு திட்ட முன்மொழிவை அதாவது அவர்களுடைய வழமையான 6 மில்லியன் ரூபாவில் மேற்கொள்ளும் சிறிய திட்டங்களைப் போல் இல்லாது தனி ஒரு திட்டமாக குறித்த ஒரு மில்லியன் ரூபாவில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டத்தைத் தர வேண்டும்.

இதனைப் பல உறுப்பினர்கள் சேர்ந்தும் ஒரு திட்டமாகச் சமர்ப்பிக்கலாம் (உதாரணம்:- வீதி அமைத்தல்). அவ்வாறான திட்டத்தினை சமர்ப்பித்தால் மட்டுமே நிதி ஒதுக்குவது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். திட்டமானது குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் மேலதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது.

திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் உறுப்பினர்கள் எந்தத் துறைக்கு ஊடாக அதனை முன்னெடுப்பதற்கு திட்டத்தினை சமர்ப்பித்துள்ளார்களோ அத்துறைக்கு ஊடாக சமர்ப்பித்த உறுப்பினரின் பெயரில் அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மேற்குறிப்பிடப்படும் திட்ட முன்மொழிவானது 6 மில்லியன் ரூபாவில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களுக்கான திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2017 ஆம் ஆண்டின் வைகாசி மாதத்தின் இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் எந்தவிதமான திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

உறுப்பினர்கள் திட்டங்களைத் தயாரிக்கும் முன்னர் உதாரணமாக:- கோழி வளர்ப்பு, வீதி அமைத்தல் அல்லது திருத்துதல், கணனி கொள்வனவு செய்தல் போன்றவற்றை, துறைசார்ந்த திணைக்களங்கள் மற்றும் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து மதிப்பீடுகளைப் பெற்ற பின்னர் திட்டத்தினைத் தயாரித்தால் பின்னர் அவற்றை மாற்ற வேண்டிய தேவை ஏற்படாது என்பதுடன் அவற்றை இலகுவாகவும் விரைவாகவும் நடைமுறைப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

உறுப்பினர்கள் கூடிய தொகையை பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடாக எதிர்பார்த்திருப்பதை நான் அறிவேன். ஆனால் தரப்படும் நிதிகளை நாங்கள் முன் கவனத்துடன் செலவழிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

தரப்படும் நிதி ஒதுக்கீட்டில் ஒரு தொகைப் பணத்தைச் சேமித்து வைத்து அவசர தேவைகளுக்குப் பயன்படுத்துவதில் பிழையில்லை என்பதே எமது கருத்து. உதாரணத்திற்கு புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம் போன்றவற்றிற்கு எமக்குப் பணம் இன்னமும் ஒதுக்கப்படவில்லை. இந்த மிகுதிப் பணத்தில் ஒரு பகுதியையே அவற்றிற்குப் பயன்படுத்த இருக்கின்றோம். குறித்த பணம் அத்தியாவசிய அல்லது அவசர தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதைக் கூர்ந்து அவதானித்து வருவது எங்கள் எல்லோரதும் பொறுப்பாகும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்கு அனைத்து மாகாண சபை உறுப்பினர்களதும் ஒத்துழைப்பு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலதிக பணம் வேண்டும் என்பதிலேயே குறியாக இருக்காது ஆறு மில்லியனை உரிய பயனாளிகளுக்குச் சென்றடைய வழி அமைப்போமாக!

(தொடரும்)

## அரசியல் தேவைகளுக்காக

# 19 ஆவது திருத்தத்தை மாற்ற ஒருபோதும் இடமளிக்க முடியாது

## ஜே.வி.பி.திட்டவட்டம்



(கொழும்பு)

தனது சகோதரனான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் இணக்கமாக செயற்பட முடியாது. என்பதை வெளிப்படையாக குறிப்பிட முடியாத காரணத்தினாலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை கடுமையாக எதிர்க்கின்றார்.

நாட்டுக்குத் தேவையான அரசியலமைப்பினை உருவாக்கும் நோக்கம் ராஜபக்ஷர்களுக்கு கிடையாது. நீதிமன்ற கட்டமைப்பின் ஊடாக தங்களின் சுய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே முயற்சிக்கின்றார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பொது சிவில் நிர்வாக சேவையில் இன்று அதிகளவில் இராணுவத்தினர் இணைத்துக் கொள்ளப்படுவதன் பின்னணி என்ன?. இராணுவ ஆட்சிக்கான ஆரம்ப அடித்தளமே தற்போது இடப்படுகின்றது.

இதற்கு தடையாக சுயாதீனப் படுத்தப்பட்ட நீதிமன்றம் உள்ளதால் 19 ஆவது திருத்தத்தை ஜனாதிபதி கோட்டாபய கடுமையாக எதிர்க்கின்றார். இவர்களின் நோக்கத்திற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க முடியாது எனவும் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வரட்சியால் 2இலட்சத்து 98 ஆயிரம் பேர் பாதிப்பு மூன்று மாவட்டங்களில் நீர் விநியோகம் துண்டிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வரட்சியான வானிலை காரணமாக கம்பஹா, களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளுக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது.

இந்நிலையில், குறித்த பகுதி மக்களுக்கு பவுசர் மூலம் நீர் விநியோகிக்கப்படுவதாக அந்த சபையின் பொதுமுகாமையாளர் ஆர்.ருவினஸ் தெரிவித்தார்.

இதன்காரணமாக நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மக்களை கேட்டுக் கொண்டது.

வரட்சியுடன் கூடிய வானிலை நீடிக்குமானால் பதுளை, மகியங்கனை, குருநாகல் உள்ளிட்ட பகுதிகளுக்கு நீர் விநியோகிப்பதில் சிக்கல் ஏற்படலாம் எனவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் சுட்டிக் காட்டினார்.

மேலும் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவும் பகுதிகள் காணப்படுமாயின், அது குறித்து 1939 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதேவேளை,நாட்டில் நிலவும் வரட்சியுடனான வானிலை காரணமாக இதுவரை 6 மாவட்டங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 98 ஆயிரத்து 45 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கேகாலை, இரத்தினபுரி, கண்டி, களுத்துறை, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 74 ஆயிரத்து 778 குடும்பங்கள் இதில் அடங்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது. (இ-7)

# தங்கமாக மாறிய பெண்ணின் உடல்!

(கொழும்பு)

தங்கத்தை கடத்த முயன்ற இலங்கை பெண் ஒருவர் சென்னை விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண் தனது உடலினுள் தங்கத்தை மறைத்துக் கொண்டு சென்ற வேளையில் கைது செய்யப்பட்டார். தங்கத்தின் பெறுமதி 50 லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பெண் கொழும்பிலிருந்து சென்னை விமான நிலையத்திற்கு சென்றார். விமான நிலையத்தில் இருந்து வெளியேறும் போது அவர் தடுத்து நிறுத்தப்பட்டார்.

இந்நிலையில் அவரை சோதனையிட்ட போது அவரது உடலில் தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டதாக சென்னை சுங்கப் பிரிவு அறிவித்துள்ளது. (ஜ)

# நாய் குறுக்கே பாய்ந்ததில் மோட்டார் சைக்கிள் விபத்து

## ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

நாய் குறுக்கே பாய்ந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயங்களுக்குள்ளானார். இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்னால் இடம்பெற்றது. இவ் விபத்தில் படுகாயங்களுக்குள்ளான நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றபபட்டார். (இ-7-60)

# சாயிசேவா நிறுவன போயா தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சத்திய சாயி சேவா நிறுவனத்தின் போயா தின நிகழ் வுகள் இன்று 9 ஆம் திகதி திங்கட்கிழமை திருநெல்வேலி, சேர்.பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள நிறுவனத்தில் இடம் பெறும். (ஜ)

# உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் தலைமைகளையே பாராளுமன்றம் அனுப்புங்கள்

## மகரூப் கோரிக்கை



(கொழும்பு)

சமூகத்தின் உரிமைகளையும்,பாதுகாப்பையும் உறுதிப் படுத்தக்கூடியவர்களை இம்முறை பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள் என திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மகரூப் தெரிவித்தார்.

தம்பலகாமப் பகுதியில் நேற்று இடம்பெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத் தேர்தலில் இம்முறை ஜனாதிபதி சொல்வதைப் போன்று 150 ஆசனங்களையோ,முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சொல்வதைப் போன்று 113 ஆசனங்களையோ எந்தப்பெரும்பான்மைக் கட்சிகளும் பெறமுடியாது. ஆகக் குறைந்தது 105 ஆசனங்களையே பெறமுடியும் இதில் சிறுபான்மைக் கட்சிகளான தமிழ்,சிங்கள,முஸ்லிம் மலையகத்தைச் சேர்ந்த கட்சிகள் இணைந்து 45 அல்லது 55 ஆசுக்குறைந்த பட்சம் ஆசனங்களைப் பெறமுடியும் .

இதை விடுத்து மக்கள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் பீதியையும் அச்சுறுத்தலையும் மக்கள் மத்தியில் விட்டுவருகிறார்கள்.

ஆட்சி அதிகாரத்தை ஏப்ரல் 26 ஆம் திகதி சிறுபான்மை மக்கள் தீர்மானிக்க வேண்டும் மாவட்டத்திலும் தேசியத்திலும் குரல் கொடுக்கக் கூடிய எந்த சவாலுக்கும் முகங்கொடுக்கக் கூடியவர்களை பாராளுமன்றம் அனுப்புங்கள் இதனை மக்களே தீர்மானிக்க வேண்டும்

தவறவிடும் பட்சத்தில் உரிமைகளை இழந்து அடிமைச் சமூகங்களாக மாற்றப்பட்டு விடுவோம்.சமூக ஒற்றுமை நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு ஆட்சி அதிகாரத்தை எம்மால் கண்டுகொள்ள முடியும்.

சமூகத்தின் இருப்பைப் பாதுகாக்கக் கூடிய மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் துணிச்சலுடன் பணியாற்றும் தலைவர்களை இம்முறை பாராளுமன்றத்திற்கு அனுப்பும் சக்தியாக மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# சூழல் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி கோட்டா கவனம்

(கொழும்பு)

நாட்டின் அனைத்து நகர மற்றும் கிராமியப் பிரதேசங்களில் சூழலின் தூய்மையைப் பாதுகாப்பது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தினார். மக்கள்நேய சூழல் முறைமையொன்றை உறுதிசெய்வதன் மூலம் மக்களின் உடல் மற்றும் உள சுகாதார நிலைமையை மேம்படுத்தல், நகர வாகன நெரிசலைக் குறைத்தல் மற்றும் வாகன விபத்துக்களை குறைப்பதற்கும் முடியும். நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களை மீறி சுற்றாடலை மாசுபடுத்துபவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

சுற்றாடலின்தூய்மையை வினைத்திறனாக பேணுவதற்காக நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவுகளை அறிவூட்டுவதற்கு பணிப்புரை வழங்கப்பட்டது. ஜனாதிபதி விசேட செயற்றிட்ட, சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் ராஜபக்ஷ வின் தலைமையில் கடந்த 6 ஆம் திகதி கொழும்பு கோட்டையில் உள்ள செமா கட்டடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. பொலிஸ் சுற்றாடல் பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். கொழும்பு நகரத்தை சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் சுத்தமான நகரமாக மாற்றுவதும் இக்கலந்துரையாடலின் நோக்கங்களில் ஒன்றாகும்.

மக்கள் நேய சூழல் ஒன்றைப் பேணுவதற்கு உள்ள தடைகளை கண்டறிந்து அவற்றிற்கான தீர்வுகளும் முன்மொழியப்பட்டன. கழிவகற்றுவதற்கு உரிய இடங்கள் இல்லாமை, முறையற்ற விதத்தில் கழிவுகளை அகற்றுதல், அதிகாரிகளின் பற்றாக்குறை, உள்ளூராட்சி நிறுவனங்கள் போதுமான வகையில் அதிகாரிகளை அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமை போன்றன அவற்றுள் சில பிரச்சினைகளாகும். சில பிரதேசங்களில் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய நிறுவனங்கள் இல்லாதிருப்பதும் பிரச்சினையானதாகும்.

இந்த விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறிவிப்பதற்கும் முன்மொழியப்பட்டது. ஜனாதிபதி அதிகாரத்திற்கு வந்தவுடனேயே பொலிஸ் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவை புனரமைக்குமாறு பணிப்புரை விடுத்ததாக பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் ராஜபக்ஷ தெரிவித்தார். (ஜ)

# இலங்கைத் தமிழ் அகதி குடும்பத்துக்காக அவுஸ்திரேலியா 26.8 மில்லியன் டொலர் செலவு



(மெல்போர்ன்)

கடந்த ஜூலை 2018 முதல் ஓகஸ்ட் 2019 வரையிலான காலகட்டத்தில், அகதிகளை இடம் மாற்றுவதற்காக 6.1 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை அவுஸ்திரேலிய உள்துறை செலவழித்துள்ளது.

இதில் 5.7 மில்லியன் டொலர்கள் தனி விமானங்களுக்காவும் 4 லட்சம் டொலர்கள் வணிக ரீதியிலான விமானங்களுக்காகவும் செலவழிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பீட்டர் டட்டன் தலைமையிலான உள்துறையில், இவ்வாறான செலவுகள் தொடர்ந்து அதிகரிப்பதற்கான காரணம் என்ன என்ற கேள்வியை முன்வைத்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சியான லேபர் கட்சி. இதில், குறிப்பாக தமிழ் அகதி குடும்பம் சிறைவைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாம் பற்றிய கேள்வியும் எழுந்துள்ளது.

நான்கு பேர் கொண்ட ஒரு தமிழ் அகதி குடும்பம் சிறைவைக்கப்பட்டிருக்கும் இம்முகாமிற்கு 26.8 மில்லியன் டொலர்களை அவுஸ்திரேலிய அரசு செலவழித்துள்ளதே இக்கேள்விக்கான முக்கிய காரணம்.

கடந்த 2012 இல் படகு வழியாக இலங்கையிலிருந்து வெளியேறி அவுஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருந்த நடேசலிங்கமும், 2013இல் தஞ்சமடைந்திருந்த பிரியாவும் அவுஸ்திரேலியாவில் சந்தித்த பின் திருமணம் செய்து கொண்டனர்.

தஞ்சக் கோரிக் கையாளர்களான இவர்களுக்கு அவுஸ்திரேலியாவிலேயே இரு பெண் குழந்தைகள் (கோபிகா, தருணிகா) பிறந்தன.

அவுஸ்திரேலியாவின் பிலோ ayh (Biloela) நகரில் வசித்து வந்த இவர்களின் விசா, கடந்த மார்ச் 2018இல் காலாவதியாகியதாக கைது செய்யப்பட்டு மெல்பேர்ன் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டனர்.

அண்மையில், அவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட இருந்த நிலையில் அம்முயற்சி கடைசி நிமிட நீதிமன்ற தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது.

பின்னர், அவர்களை கிறிஸ்மஸ் தீவுக்கு கொண்டு சென்றது அவுஸ்திரேலிய அரசு. இத்தீவில் செயற்படும் முகாமிற்கு பெரும் தொகை செலவழிக்கப்பட்டது குறித்தே தற்போது விமர்சனம் எழுந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (ஜ)

# கட்சிகளின் சின்னங்களை மாற்றுவதற்கு சந்தர்ப்பம்

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

அரசியல் கட்சிகளின் சின்னங்களை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் கட்சிகளுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்சிகள் சமர்ப்பிக்கும் காரணங்களை கருத்திற் கொண்டு, சின்னங்களை மாற்றுவது தொடர்பாக இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1997


**அபி**

பொருத்தம் இல்லாததுகூட
பொருந்திப் போகிறது
ஏழையின் நடையில்



**துவேனி**

கண்களை விட கண்ணீருக்கு மதிப்பு அதிகம்.
ஏனென்றால் கண்கள் உலகத்தைக் காட்டும்.
ஆனால் கண்ணீர் உள்ளத்தைக் காட்டும்



**கமலி**

தூக்கி எறியப்படும் ஒன்றுதான்
இன்னொருவருக்கு புதியதாகிறது...
அது மனசானாலும் சரி, பொருளானாலும் சரி



**திஸ்மிகன்**

இந்த உலகத்தில் எத்தனையோ சந்தோசம்
இருந்தாலும் நாம் தேடும் சந்தோசம் நம்
மனதிற்குப் பிடித்தவர்களின் அன்பு மட்டுமே



**அரங்கன்**

முடிவெடுப்பது நீயாக இருக்கும் வரை உன்
முன்னேற்றத்திற்கு தடைபோட எவருமில்லை



**அக்ஷயன்**

இங்கு ஒருவரும் உண்மையாய் இல்லை என
உணர்ந்த தருவாயில் தான் ஒரு தவறை
எந்தவிதக் குற்ற உணர்வும் இல்லாமல்
செய்யத் துடிக்கிறது நம் மனம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து நிதியைப்பெற அமைச்சரவை அனுமதி



(கொழும்பு)

அரசாங்கத்தால் செலுத்தப்படவுள்ள கடன்கள் மற்றும் புதிய வேலைத்திட்டங்களுக்காக சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 1000 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் 2000 மில்லியன் யென்களையும் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கத்திடம் நிதி இல்லை என்றும் இனி அரசாங்கத்தால் செயற்பட முடியாது என்றும் எதிர்த்தரப்பினர் கருத்துத் தெரிவித்து வந்தனர்.

இது தொடர்பாக அவதானம் செலுத்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த மூன்று மாதகாலத்திற்கு அரசசெலவுகளை முன்னெடுப்பதற்காக திறைசேரி செயலாளருக்கு அனுமதியைப் பெற்றுக் கொடுத்துள்ளார். அதற்கமைய அரசாங்கத்தால் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகைகளைச் செலுத்த எதிர்பார்த்திருக்கின்றோம்.

இந்நிலையில் புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு கடன் பெறுவது தொடர்பாக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இதன்போது சீன அபிவிருத்தி வங்கியிலிருந்து 1000 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் 2000 மில்லியன் யென்களையும் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. 3 வருட சலுகை அடிப்படையிலேயே இந்த நிதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளதுடன், இந்த விவகாரம் தொடர்பாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

எதிர்த்தரப்பினர் எம்மால் சர்வதேசத்தில் கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்திருந்தனர். தற்போது சீனாவுடன் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று நோயின் நிலைமை மற்றும் அதனைத் தடுப்பதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து வெளிவிவகார இராஜதந்திரிகளுக்கு வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன விளக்கினார்.

வைரஸ் பரவுவதைக் குறைப்பதற்குப் போதுமான தடுப்பு நடவடிக்கைகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஊடகங்களின் வகிபாகத்தைப் பாராட்டிய அதேவேளையில், தேவையற்ற முறையில் அச்சத்தை ஏற்படுத்தாமல், வைரஸின் ஆபத்துக்கள் குறித்து அவதானமாக இருக்கும் வேளையில் பொது மக்களுக்குச் சரியான தகவல்களை வழங்குவதில் ஊடகங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையிலான குழுவில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள், உலக சுகாதாரத் தாபனத்தின் வதிவிடப் பிரதிநிதி, இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, குடிவரவுத் திணைக்களம், விமான் நிலைய அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

இலங்கை மாணவர்களை வுஹானில் இருந்து வெற்றிகரமாக வெளியேற்றுவது குறித்த இலங்கையின் தயார் நிலை மற்றும் அதன் வெற்றிகரமான பெறுபேறு குறித்து வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க தனது ஆரம்ப உரையில் தெரிவித்தார்.

இந்த நோக்கத்திற்காக சீன அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பிற்கு செயலாளர் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரால் தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட வகையில், வைரஸைப் பற்றிய ஆதாரமற்ற அச்சத்தின் காரணமாக எந்தவொரு வெளிநாட்டுப் பிரஜைக்கும் பாகுபாடு காட்டப்படமாட்டாது என அவர் தெரிவித்தார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிகிச்சை தொடர்பில் அவ்வப்போது கூறப்படும் சில சம்பவங்கள் நாட்டின் பொதுவான நிலைமையை பிரதிபலிக்கவில்லை எனவும் வெளிவிவகார செயலாளர் ஆரியசிங்க தெரிவித்தார்.

கொவிட் - 19 இன் அச்சுறுத்தல் சர்வதேச அக்கறைக்கான பொது சுகாதார அவசர நிலையை எட்டியுள்ளதுடன், இதன் விளைவாக, உள்நாட்டு சுகாதார வசதிகளை வலுப்படுத்துவதற்கான தீவிரமான திட்டத்தை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளதாக சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

ஆரம்ப கட்டமாக, நாடு முழுவதும் 17 வைத்தியசாலைகள் தயார்ப்படுத்தப்பட்ட நிலையில் கொவிட்- 19 தொற்று நோயைக் கையாள்வதற்கு ஏற்ற வகையில் அவற்றுக்கு முறையாக சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# சுதந்திரக்கட்சியை அழிக்கும் வேலையை பொதுஜன பெரமுன ஆரம்பித்துள்ளது

## தயாசிறி பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிக்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

குருநாகல் - பொத்துஹெர பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கூறுகையில்,

இதன் காரணமாக எமது பொறுமை எல்லை மீறியுள்ளது. மைத்திரிபால சிறிசேனவுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூறியிருந்தால், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணி பார்க்க வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாம் தரத்திற்கு தள்ளி தாக்குதலுக்கு உள்ளாக்கி வருகின்றனர். கீழ் மட்டத்தில் இருக்கும் சிறிய அரசியல்வாதிகளே சுதந்திரக் கட்சியை திட்டி வருகின்றனர்.

சுதந்திரக் கட்சியினர் இல்லை என்றால், பொதுஜன பெரமுன என்ற ஒன்று இருந்திருக்காது. முடிந்தளவு பொறுமை காத்து இதனைக் கூறுகின்றேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட அனைவரும் இணைந்து வெற்றியை பெற்றுக்கொண்டோம். இதனை இன்று மறந்துள்ளனர். இதனைதான் நன்றி மறப்பது என்று கூறுவார்கள். பொதுஜன பெரமுனவின் இந்தத் தாக்குதலுக்கு மத்தியில் அமைதியாக இருப்பதால் அல்லது எதிராக மாற்று சக்தியை அமைப்பதா என்பது தொடர்பில் நல்ல புரிதலோடு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# செய்தித்துளிகள்

## சிறுவர்களுக்கான "கதை கூறல்"



(யாழ்ப்பாணம்)

"பசுமைச் சுவடுகள்" அமைப்பின் குடத்தனை மேற்கு, வலிக்கண்டி முன்பள்ளிக்கட்டடத்தில் சிறுவர்களுக்கான "கதைகூறல்" நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விலங்கு நடத்தைகள், மனித மனங்களின் கற்பனையின் பன்மைத்துவம், பிறழ்வுகளின் அரசியல், அவை எவ்வாறு குற்றமாகின்றன, அவற்றுக்கான தண்டனைகள் எவ்வாறு உருவாகின்றன, ஏன் அனைத்தையும்.கேள்விக்குட்படுத்த வேண்டும்? போன்ற விடயங்கள் சிறு சிறு கதைகளினூடாகவும், கேள்வி விடைகளாகவும் உரையாடப்பட்டன.

இறுதியாக வலிக்கண்டி சிறுவர் நூலகத்திற்கு ஹாட்லிக் கல்லூரி 2014 ஆம் ஆண்டு மாணவர்களால் ஒரு தொகை சிறுவர்களுக்கான புத்தகங்கள், இதழ்கள் வழங்கப்பட்டு கதைகூறல் நிகழ்வு நிறைவடைந்தது. (இ)

## சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் சனசமூக நிலையத் தலைவர் லயன் நா.தனேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட காணிப்பதிவாளர் குணாஜினி சதீஸ்குமார் கலந்து கொள்வார். (இ-2-106)

## இரு நூல்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச கலாசார அதிகாரசபை கலாசார பேரவையின் ஏற்பாட்டில் த.அஜந்தகுமாரின் இருநூல்கள் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் மழலை ஓவியங்கள், இனிப்பு கதைகள் ஆகிய இரு நூல்கள் வெளியிடப்படும். (இ-114)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 140 |
| தக்காளி | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 100 |
| கோவா | 80 | 100 | 120 |
| கரட் | 100 | 180 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 |
| புடோல் | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 160 |
| பாகற்காய் | 160 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 180 | 200 | 160 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 90 | 400 | 400 |
| போஞ்சி | 100 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 60 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 65 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 180 | 140 |
| வெங்காயப்பூ | 150 | 140 | 160 |
| முள்ளங்கி | 20 | — | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | — | 100 |




# ஆயிரம் நாணயங்கள்



முல்லாவிற்கு கடவுளிடம் சத்தமாக வேண்டிக்கொள்ளும் பழக்கம் இருந்தது. தினமும் ஒரே வேண்டுதலை ஒரே விதமாக வேண்டிக்கொள்வார். ஒரு நாள் "கடவுளே எனக்கு ஆயிரம் நாணயங்கள் வேண்டும். அதில் ஒரு நாணயம் குறைந்தாலும் வாங்கமாட்டேன்" என்று கடவுளிடம் வேண்டிக் கொண்டு இருந்தார்.

முல்லாவின் வேண்டுதலை தினமும் கேட்டுக்கொண்டு இருந்த பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவை ஏமாற்ற நினைத்தார்.

பக்கத்து வீட்டுக்காரர் தன் வீட்டிற்கு சென்று தன்னுடைய சேமிப்பு பணத்தில் இருந்து 999 நாணயங்களை ஒன்றாக ஒரு சிறிய பையில் கட்டிக்கொண்டு முல்லாவின் வீட்டை நோக்கி ஓடினார்.

முல்லாவின் வீட்டை அடைந்ததும் அந்த பக்கத்துக்கு வீட்டுக்காரர் தான் கொண்டு வந்த பணப்பையை முல்லாவின் ஜன் னல் வழியாக முல்லாவை நோக்கி வீசினார்.

முல்லா வேண்டுதலை முடித்த பிறகு அருகில் ஒரு பை இருப்பதை பார்த்தார். அதை திறந்து பார்த்த போது உள்ளே நாணயங்கள் இருப்பதை கண்டார். உடனே கடவுள் தான் வேண்டுதலை நிறைவேற்றி விட்டார் என கூறிக்கொண்டு கடவுளுக்கு நன்றி தெரிவித்து நாணயங்களை எண்ணத் தொடங்கினார்.

முல்லா காசை எண்ணத் தொடங்கிய பொழுது அதை ஜன்னல் வழியாக அந்த பக்கத்து வீட்டுக்காரர் வேடிக்கை பார்த்தார். முல்லாவோ நாணயங்களை எண்ணி முடித்த பிறகு அதில் 999 நாணயங்கள் மட்டுமே இருந்தன.

பின்னர் முல்லா, "நன்றி கடவுளே. ஆனால் மீதம் உள்ள 1 நாணயத்தை சீக்கிரம் குடுத்து விடு" என கடவுளிடம் வேண்டினார். இதை சற்றும் எதிர்பாராத பக்கத்து வீட்டுக்காரர் முல்லாவிடம் சென்று இந்த பணப்பை என்னுடையது. நான் தான் உன் வீட்டிற்குள் தூக்கி எறிந்தேன் என்னிடம் குடுத்து விடு என முல்லாவிடம் கெஞ்சினார். ஆனால் முல்லாவோ கடவுள் "உன், மூலமாக எனக்கு உதவி செய்துள்ளார் என கூறி உனக்கு குடுக்க இயலாது" என்று கூறிவிட்டார்.

வேறு வழி இல்லாமல் அந்த பக்கத்து வீட்டுக்காரர் பஞ்சாயத்துக்கு போகலாம் என்று முல்லாவிடம் கூறிவிட்டார். ஆனால் முல்லாவோ "எனக்கு உடல் நிலை சரி இல்லை. மேலும் என்னால் நடக்கவும் இயலாது" என்று கூறினார்.

அதற்கு அந்த பக்கத்து வீட்டுக்காரர் "என்னுடைய கழுதையை தருகிறேன் வா" என்று முல்லாவிடம் கூறினார்.

அதற்கு முல்லாவோ என்னுடைய உடையை பார் அழுக்காக உள்ளது என்று கூறி அவருடைய உடையையும் வாங்கிக் கொண்டு பஞ்சாயத்துக்கு சென்றார்.

இருவரும் நீதிபதியிடம் வந்து சேர்க்கின்றனர். நீதிபதி முழு கதையையும் கேட்டு அறிந்து கொண்டார். பின்னர் முல்லாவோ நீதிபதி அவர்களே அவனை நம்பாதீர்கள். அவன் இப்பொழுது எல்லாம் மற்றவர்களின் பொருட்களை எல்லாம் தன்னுடையது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார். உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் என்னுடைய துணியையும் எனக்கு பின்னால் நிற்கின்ற கழுதை இரண்டையும் என்னுடையது என்றே சொல்லுவான்.

அடுத்த நொடியே அந்த பக்கத்து வீட்டுக்காரர் முல்லா அணிந்துள்ள துணி மற்றும் அந்த கழுதை இரண்டு என்னுடையது என்று நீதிபதியிடம் கூறினான்.

நீதிபதி பார்த்தீர்களா எனக்கு இப்போது புரிந்து விட்டது. முல்லா நீ உனது பணப்பையை எடுத்து செல்லலாம். இதை கேட்டு அந்த பக்கத்து வீட்டுக்காரர் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்து கண்ணீர் விட்டார்.

இறுதியில் முல்லாவோ அந்த பணப்பையையும் அந்த கழுதையையும் எடுத்துக்கொண்டு இல்லம் நோக்கி நடந்தான்.

**நீதி: முட்டாள் தனம் இழப்பையே தரும்.**

## விடுகதைகளும் விடைகளும்

• உச்சியில் குடுமி உண்டு மனிதனல்ல. உடம்பெல்லாம் உரோமமுண்டு குரங்குமல்ல. உருண்டை விழி மூன்றுண்டு சிவனுமல்ல.

**தேங்காய்**

• செடியில் விளையாத பஞ்சு தறியில் நூற்காத நூல் கையில் தொடாத துணி.

**சிலந்தி வலை**

• ஓடிப் படர்வேன் கொடியல்ல. ஒளிமிக உண்டு நிலவல்ல. மனைகளை அலங்கரிப்பேன் மலரும் அல்ல.

**மின்சாரம்**

• தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான். தொட்டால் போதும் ஒட்டிக் கொள்வான்.

**ஒட்டடை**

• குட்டி போடும் ஆனால், எட்டப் பறக்கும்.

**வௌவால்**

• பிறக்கும்போது சுருண்டிருப்பாள் பிறந்த பின்னர் விரிந்திருப்பாள்.

**வாழை இலை**

• நாலு மூலை நாடகசாலை நடுவிலிருக்கும் பாடகசாலை ஆடும் பெண்கள் பதினாறு. ஆட்டி வைப்பவர் இரண்டுபேர்.

**சொக்கட்டான்**

• எலும்பில்லாத மனிதன். கிளையில்லாத மரத்தில் ஏறுகிறான்.

**பேன்**


• ஆனை விரும்பும் சேனை விரும்பும். அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும்.

**கரும்பு**

• காய்த்த மரத்திலே கல் எடுத்துப் போட்டால், காவல்காரப் பையன் கோபப்பட்டு வருவான்.

**தேனி**

## வழிகாட்டுங்கள்



உருவில் உள்ள 4 வித்தியாசங்களையும் கண்டுபிடியுங்கள்



கண்கள் உறங்கலாம்
கனவுகள் உறங்கக்கூடாது
- அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்...

உலகப் பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள் உலக வாழ்வியல் அத்தனைக்கும் தீர்வு தருகிறது.

எனினும் திருக்குறளைக் கற்பதில் நம்மவர்கள் பெரிதாக ஆர்வப்படவில்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

எனினும் தமிழ் மொழி பேசாதவர்கள் திருக்குறளின் மொழிபெயர்ப்பைத் தேடிக் கற்று அதன் தத்துவத்தைப் பின்பற்றுகின்றனர்.

இந்திய தேசத்துக்கு விடுதலை வாங்கிக் கொடுத்த அண்ணல் மகாத்மா காந்தி; திருக்குறளைக் கற்றுவிட்டு, தமிழில் திருக்குறளைக் கற்பதற்காக நான் அடுத்த பிறப்பில் தமிழனாகப் பிறக்க வேண்டும் எனக் கூறினார்.

காந்தியடிகளின் வாக்கு ஒன்று போதும் திருக்குறளின் பெருமையை உணர்ந்து கொள்வதற்கு.

எனவே திருக்குறளைக் கற்றறிந்து நம் வாழ்வைச் செம்மைப்படுத்த எம் தமிழ்ச் சமூகத்தைத் தயார்படுத்த வேண்டும்.

அப்போதுதான் பல விடயங்களை நம் தமிழினம் அறிந்து கொள்ள முடியும்.

இதற்கு உதாரணம் பலவற்றைக் கூற முடியுமாயினும் ஒரு திருக்குறளை மட்டும் இங்கு எடுத்துக் கொள்கின்றோம்.

வள்ளுவப் பெருமான் இந்த உலக மக்களைப் பார்த்து,

*தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்*
*தீரா இடும்பை தரும்*

என்றார்.

ஒருவரை நன்கு ஆராய்ந்து அவரை உறவாக்க வேண்டும்.

இதைவிடுத்து இப்போது அவரை ஏற்றுக் கொள்வோம் பின்னர் அவரை அறிந்து கொள்வோம் என்றால், அதைவிட்ட துன்பம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

வள்ளுவன் கூறிய இத்தத்துவம் எங்கள் தமிழினத்துக்குச் சாலப்பொருத்துடையது.

ஆம், தமிழ் மக்களாகிய நாம் எதையும் ஆராயாமல் விட்டுவிட்டு, பின்னர் சம்பந்தப்பட்டவர்களைக் குறைகூறுகின்ற பழக்கம் கொண்டவர்கள்.

இத்தகைய பழக்க தோசம் தமிழ் அரசியலில் பெரும் குழப்பங்களையும் தமிழ் இனத்துக்கான தோல்வியையும் தந்துள்ளது.

எனவே இனி மேலாவது

*தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்*
*தீரா இடும்பைத் தரும்*

என்ற குறளை மனத்திருத்தி எதையும் ஆராய்ந்து, அதன் சாதக பாதகங்களை– நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து ஏற்றுக் கொள்வதா? இல்லையா? என்ற முடிவை எடுக்க வேண்டும்.

இதைவிடுத்து எந்த நன்மை தீமைகளையும் பாராமல் ஏற்றுக் கொண்டு விட்டு, பின்னர் அவர் பிழை என்று கூறுவது துன்பத்தைத் தரக்கூடியதாகும்.

ஆகையால் எதிர்வரும் பொதுத் தேர்தலிலேனும் *தேரான் தெளிவும்...* என்ற திருக்குறளை மனத்திருத்தி முடிவை எடுக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

போதைப்பொருளிலிருந்து நாட்டை மீட்காவிட்டால் அழிவுதான்

# வறுமையை இல்லாது ஒழிக்கவே நான் களமிறங்குகிறேன்-மைத்திரி

(பொலநறுவை)

போதைப் பொருளில் இருந்து சமூகத்தை மீட்டெடுப்பதன் ஊடாகவே பொருளாதார ஸ்திரத்தன்மை கொண்ட நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்றுஇடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: "இன்று வறுமைக் கோட்டுக்குக் கீழ் பலர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இலங்கையைப் பொறுத்தவரை வறுமைக்கு முக்கியமான காரணமாக போதைப்பொருள் மற்றும் மதுபாவனை காணப்படுகிறது.

இவ்வாறான பிரச்சினைகளால் பெண்களே அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனினும், பெண்கள் இதனை வெளியில் காண்பித்துக் கொள்வதில்லை. இந்த நிலைமையை மாற்றிய மைக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நாம் இதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டோம். வறுமையை இல்லாது ஒழிப்பதற்காகவே பாராளுமன்றத் தேர்தலில் நான் பிரதானமாக களமிறங்குகிறேன். 1947ஆம் ஆண்டிலிருந்து நாட்டை ஆட்சி செய்த, அனைத்து அரசாங்கங்களும் நாட்டுக்காக சேவை செய்துள்ளன.

முடிந்தளவிற்கு அபிவிருத்திகளை மேற்கொண்டு சமூகங்களை உயர்த்தியுள்ளன. எனினும், நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியால் சிலருக்கு மேல்நிலைக்கு வர முடியாதுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் போதைப் பொருளுக்கு அடிமையாக இருந்தால் எதனையும் செய்ய முடியாது.

எமது பிரச்சினைகளுக்கு மதுபாவனை ஒருபோதும் தீர்வாகாது. நாம் இவற்றிலிருந்து மீண்டுவர வேண்டும். பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று நாட்டு மக்களுக்காக ஸ்திரமான சேவையை மேற்கொள்வோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

## சுரேன் ராகவன் போட்டியிடார்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடமாட்டார் எனத் தெரியவருகிறது

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் போட்டியிட சுரேன் ராகவன் முயற்சித்த போதும் அவரின் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததால் இம் முறை தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரியவருகிறது

(இ-10)

## வீணையில் ஈ.பி.டி.பி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பி வீணைச் சின்னத்திலேயே போட்டியிடவுள்ளதாகவும், பிராந்திய மட்டத்திலுள்ள முற்போக்குச் சக்தி-கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் ஈபிடிபி யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தெல்லிப்பழை வீமன் காமத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு இன்னமும் இறுதிக் கட்டத்தை அடையவில்லை எனவும், தற்போது இதற்கான பணிகள் சுமுகமாக இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-18)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** பண்டத்தரிப்பு, பாணாவெட்டி, காஞ்சிபுரம், மாதகல், சுசுமாந்துறை, ஜம்பு கோளபட்டினம், காட்டுப்புலம், ஜம்பு கோளப்பட்டினம் **Rest House** ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** முகத்தாங்குளம் 2ம் வட்டாரம், தெற்கிலுப்பைக் குளம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, பகல அளுத்வத்த கிராமம், வவுனியா நகரம் ஒருபகுதி, பஸார் வீதி, 1ஆம் குறுக்குத் தெரு, 2ஆம் குறுக்குத் தெரு, இலுப்பையடி, கூசைப்பிள்ளையார்குளம், கொரவப் பொத்தானை வீதி, றம்பைக் குளம், ஹோட்டல் ஓவியா, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, இராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**காலத்தை வென்று விளங்கி இயற்கையோடு இயைந்து வாழக் கற்றுக்கொள்ளும் வரை மனிதனுக்கு வெற்றி ஏற்படாது. -எமர்சன**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆக்கத்துறை



உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பாக்கியம் எல்லாம் முன்னே நீங்கள் இதுவரை செய்த வினையின் விளைவு.செயலின் விளைவு என்று தெரிந்து கொண்டு அதனுடைய பயனாக இனிமேல் நல்ல காரியங்களையே செய்வோம் என்று எண்ணிக் கொண்டு நலமுள்ள காரியத்தை செய்வேன் நலமுள்ள காரியத்தை நினைப்பேன், அதற்கு என்னுடைய ஆற்றல் முழுவதும், உடல்சக்தி முழுவதும் செயல்பட்டும் என்று எண்ணினீர்களானால் அது தான் **Positive thinking, Positive side. Positive side** என்றால், தமிழில் "ஆக்கத் துறை" என்று பெயர். **"Negative"** என்றால் "முறித்தல்", "எதிர்த்தல்" என்று பொருள். எதிர்ப்பின்றி "ஆக்கம்",என்றால் மேலும் மேலும் நலன் அளிக்கக் கூடியதுதான் அந்த ஆக்கம். அந்த முறையிலே நீங்கள் எப்படி எண்ணுகின்றீர்களோ அப்படித்தான் நலம் விளையும். ஆகவே, எல்லோரும் எண்ணத்தை நல்லதாக்கிக் கொண்டு வர வேண்டும். "பிறருக்கு உதவி செய்வேன், ஒவ்வொருவருக்கும் என்னால் இயன்றதைச் செய்து கொண்டே இருப்பேன்" என்று சொல்லும் போது அது ஊற்று மாதிரியாகவே வற்றாது சுரக்கும். அவ்வாறு பிறக்கு உதவி செய்யும் போது எங்கிருந்து செய்யப் போகிறீர்கள்? இருப்பிலிருந்து தான் கொடுக்கிறோம், இருப்பதைத் தான் செய்கிறோம். அங்கே இல்லையானால் செய்ய முடியாதல்லவா? ஆகையினால் செய்யச் செய்ய வந்து கொண்டேதான் இருக்கும் நல்ல முறையிலே அது வளர்ந்து கொண்டே தான் இருக்கும். எப்பொழுதும் அந்த மெய்யுணர்வு வந்து விட்டது என்றால், மெய்யுணர்வினைப் பயன்படுத்துவோம் என்றால், சேவையிலே நிறைவு வரும் வாழ்விலும் ஒளி பெருகும்.

மனிதன் நல்ல எண்ணத்தோடு, முயற்சியோடு, ஒரு அடி எடுத்து வைத்தால் இறைவன் பத்து அடி எடுத்து வைப்பான் என்று சொல்லப்பட்டுள்ளது. இதன் பொருள் என்ன என்றால் நீங்கள் உங்களுடைய மனம் நாடினால் போதும். **Fraction demands and Totality supplies**. ஏனென்றால் அங்கு தான் இருப்பு இருக்கிறது. நான் யாரிடமும் எதையும் எதிர்பார்க்கமாட்டேன் என்ற நிலைக்கு வந்தோமானால் என்ன ஆகும்? நல்ல எண்ணம், மனத்தூய்மை, கொண்ட ஒருவர் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு எல்லாம் வல்ல இறைவன் என்னைக் கவனித்துக் கொள்வான் என்றிருந்தால் அவரது தேவையை நிறைவேற்ற உதவிகள் எல்லாத் திசையிலிருந்தும் வந்து சேரும்.

# ஐந்து பந்துகளில் ஐந்து சிக்ஸர்கள் விளாசித் தள்ளிய தல டோனி

## குஷியில் ரசிகர்கள்



சென்னை மைதானத்தில் பயிற்சியின் போது சிஎஸ்கே அணி கப்டன் டோனி, 5 பந்துகளில் ஐந்து சிக்ஸர்களை விளாசிய காட்சி இணையத்தில் வைரலாகியுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி 2020 ஐபிஎல், தொடர் தொடங்குகிறது. மும்பையில் நடைபெறும் முதல் போட்டியில் டோனி தலைமையிலான சென்னை அணியும், ரோகித் சர்மா தலைமையிலான மும்பை அணியும் மோதுகின்றன.

உலகக்கிண்ணத் தொடரில் நியூசிலாந்து அணிக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது முதல் கிரிக்கெட்டிலிருந்து டோனி விலகியிருக்கிறார். ஐபிஎல் தொடரில் அவர் விளையாடுவதை பார்க்க ரசிகர்கள் ஆவலுடன் இருக்கின்றனர்.

ஐபிஎல் தொடரை முன்னிட்டு சிஎஸ்கே அணியுடன் பயிற்சி மேற்கொள்ள டோனி சென்னை வந்துள்ளார். பயிற்சியை காண சேப்பாக்கம் மைதானத்தில் ரசிகர்கள் குவிந்து வருகின்றனர்.

இந்நிலையில், பயிற்சியின் போது டோனி ஐந்து பந்துகளில் ஐந்து சிக்ஸர்களை அடித்து அசத்தியுள்ளார். குறித்த காட்சி இணையத்தில் வைரலாகியுள்ளது. (ஐ-2)

# பணத்தைவிட நாடுதான் முக்கியம்

## ஐ.பி.எல்.தொடரிலிருந்து கிறிஸ்வோக்ஸ் விலகல்

இங்கிலாந்து அணியின் ஓல்ரவுண்டரான கிறிஸ் வோக்ஸ் தன்னுடைய நாட்டுக்காக ஐபிஎல் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இந்தியாவில் பணம் கொட்டும் தொடராக ஐ.பி.எல்.பார்க்கப்படுகிறது. இந்த தொடரில் வீரர்கள் ஏலத்தின் அடிப்படையில் எடுக்கப்படுவர்.

வெளிநாட்டு வீரர்களும் கோடிக் கணக்கில் ஐபிஎல் அணியினரால் வாங்கப்படுவர்.

அப்படி இந்த முறை டில்லி அணி, மேற்கிந்திய தீவு அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஹெட்மயர், அவுஸ்திரேலிய வீரர்களான மார்கஸ் ஸ்டோய்னிஸ் மற்றும் அலெக்ஸ் கேரி, இங்கிலாந்தின் ஜேசன் ராய் மற்றும் கிறிஸ் வோக்ஸ் ஆகிய வெளிநாட்டு வீரர்களை ஏலத்தில் எடுத்தது.





வேகப்பந்து வீச்சு மற்றும் சகல துறை வீரர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மார்கஸ் ஸ்டோய்னிஸ் மற்றும் கிறிஸ் வோக்ஸை டில்லி அணி எடுத்தது.

ஆனால், கிறிஸ் வோக்ஸ் ஐ.பி.எல்லில் இருந்து விலகியுள்ளார்.

இதற்கு முக்கிய காரணம், ஜூன் மாதம் மேற்கிந்திய தீவுக்கு எதிராக 3 டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து ஆடவுள்ளது. அந்த தொடருக்காக புத்துணர்ச்சியுடனும் உடற்தகுதியுடனும் இருக்க வேண்டும் என்பதற்காக கிறிஸ் வோக்ஸ் ஐ.பி.எல்லில் இருந்து விலகியுள்ளார்.

குறுகிய காலத்தில் கோடிக் கணக்கில் சம்பாதிக்கலாம் என்பதால் அதிக பணம் புழங்கும் ஐபிஎல் தொடரில் ஆடுவதற்குத்தான் அனைத்து வீரர்களும் விரும்பும் நிலையில், தனது தேசிய அணிக்கு ஆடுவதுதான் முக்கியம் என்று ஐ.பி.எல்லில் இருந்து கிறிஸ் வோக்ஸ் விலகியிருப்பது, பணத்தைவிட நாடே முக்கியம் என்பதை உணர்த்துவதாக இங்கிலாந்து ரசிகர்கள் சிலர் அவரைப் புகழ்ந்துள்ளனர். (ஐ-2)

# ஒலிம்பிக் தகுதிச்சுற்று குத்துச்சண்டை; மேரிகோம், அமித் காலிறுதிக்கு தகுதி



ஒலிம்பிக் தகுதிச்சுற்று குத்துச் சண்டைப் போட்டியில், மேரிகோம், அமித் பன்ஹால் ஆகியோர் காலிறுதிக்குத் தகுதி பெற்றனர்.

ஒலிம்பிக் போட்டி டோக்கியோவில் ஜூலை 24ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக் கான ஆசிய தகுதிச்சுற்று குத்துச் சண்டை போட்டி ஜோர்தானில் உள்ள அம்மான் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில், பெண்களுக்கான 51 கிலோ எடைப்பிரிவில் 6 முறை உலக சம்பியனான இந்திய வீராங்கனை மேரி கோம் 5-0 என்ற கணக்கில் நியூசிலாந்தின் தாஸ்மைன் பென்னியை விரட்டியடித்து காலிறுதியை எட்டினார். மேரி கோம் அடுத்து பிலிப்பைன்ஸின் ஐரிஷ் மாக்னோவை எதிர் கொள்கிறார்.

இதேபோல், ஆண்களுக்கான 52 கிலோ உடல் எடைப்பிரிவில் இந்திய வீரர் அமித் பன்ஹால், மாங்கோலியா வீரர் எங்மனாடாக் கார்குவை சந்தித்தார்.

இதில், அமித் பன்ஹால் 3-2 என்ற கணக்கில் எங்மனாடாக்கை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். காலிறுதியில் அமித் பன்ஹால் பிலிப்பைன்ஸ் வீரர் கார்லோ பாலமை எதிர்கொள்கிறார். (ஐ-2)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# உங்களை நினைத்து நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்!

## பெண்கள் அணிகுறித்து விராட் ஹோலி

20 ஓவர் உலககோப்பை கிரிக்கெட் போட்டியில் முதன்முறையாக இறுதிப் போட்டியில் தகுதி பெற்ற இந்திய பெண்கள் அணிக்கு விராட் ஹோலி வாழ்த்து தெரிவித்தார்.

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதல் அரையிறுதிப் போட்டி சிட்னி நகரில் நடைபெறவிருந்த நிலையில், தொடர் மழை காரணமாக போட்டிக்கு தகுதி பெறும் நிலை ஏற்பட்டது.

அதன்படி குரூப் சுற்றில் விளையாடிய நான்கு போட்டியிலும் வெற்றிபெற்று இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இதற்கு இந்திய கிரிக்கெட் ஆண்கள் அணித்தலைவர், விராட் ஹோலி தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்தார். அதில் இறுதிச் சுற்றை எட்டிய இந்தியப் பெண்கள் அணிக்கு வாழ்த்துகள். உங்களை நினைத்து நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இறுதிப் போட்டியிலும் சாதிக்க வாழ்த்துக்கள் என்று குறிப்பிட்டார்.



இந்திய அணியின் முன்னாள் வீரர் ஷேவாக், லீக் சுற்றில் அனைத்து ஆட்டங்களிலும் பெற்ற வெற்றிக்கு கிடைத்த பரிசு. நேற்று ஞாயிற்றுக்கிழமை மகுடம் சூடுவதற்கு வாழ்த்துக்கள் என்று குறிப்பிட்டார்.

விராட் ஹோலியின் மனைவியும், இந்தி நடிகையுமான அனுஷ்கா சர்மா டுவிட்டர் பக்கத்தில், மிகச்சிறந்த ஆட்டத்தை பார்க்க உற்சாகமாக இருந்த நிலையில் மழை புகுந்து பாழ்படுத்தி விட்டது. (ஐ-2)







யாழ்.புன்னாலைக்கட்டுவன் கணேச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயம் முன்பாக இடம்பெற்றது. இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்வில் வலி.தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் வைத்தியர் ஆ.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகவும் உடுவில் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி.வடிவாம்பிகை ஜெகராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- செ.ரவிசாந்)

## உழவு இயந்திரம்...

தார்.

வட்டுக்கோட்டை - தெல்லிப்பழை வீதியில் சித்தன்கேணிச் சந்தியில் நேற்று நண்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் பண்டத்தரிப்பு வல்லசுட்டியைச் சேர்ந்த கிருஷ்ணன் இராஜதுரை (வயது-73) என்ற முதியவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உணவகத்தில் சாப்பாடு எடுத்துக் கொண்டு துவிச்சக்கரவண்டியில் பயணிக்க முற்பட்ட முதியவரை எதிரே வந்த உழவு இயந்திரம் வேகக் கட்டுப்பாட்டையிழந்து மோதியது. இதனால் முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உழவு இயந்திரம் சம்பவ இடத்திலிருந்த கடை ஒன்றுக்குள் புகுந்தது. மற்றொரு பெண் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்" என்று பொலிஸார் கூறினர்.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்ததுடன், உழவு இயந்திரச் சாரதியையும் கைது செய்தனர்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (இ-60)

## சுமந்திரன் கூறும்...

இந்நிலையில் சுமந்திரன் எங்கிருந்தோ ஒருவரைக் கொண்டு வந்து தமிழரசுக் கட்சி சார்பில் பாராளுமன்றம் அனுப்ப முயல்கிறார்.

தமிழ் மக்களின் வரலாறு தெரியாத மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் வலி தொடர்பில் நேரடியாக அறியாத பெண் வேட்பாளரை நிறுத்துவதற்கு சுமந்திரன் எடுக்கும் நடவடிக்கை கட்சிக்குப் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

எமது மகளிர் அணியானது தமிழரசுக் கட்சியில் தேசியப் பட்டியல் கேட்கவில்லை. எம்மில் ஒருவரை வேட்பாளராக நிறுத்துங்கள்; நாங்கள் போட்டியிட்டு வெற்றி பெறுவோம் என்றே கோரிக்கை விடுத்துள்ளோம்.

எனவே தமிழ் மக்களுக்கு அறிமுகமில்லாத வேட்பாளர் ஒருவரை எவ்வாறாயினும் பாராளுமன்றம் கொண்டு சென்று தனது நோக்கத்தை நிறைவேற்றத் துடிக்கும் சுமந்திரன் தொடர்பில் கட்சித் தலைவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## ஹெரோயினுடன்...

இரகசிய தகவலையடுத்து மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 23,24,25 வயது மதிக்கத்தக்க இளைஞர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 440 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## யானை அல்லது...

யெல்ல, ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியை விரும்பாதவர்களே சின்னம் தொடர்பில் சட்ட சிக்கல் இருப்பதாக பொய் உரைப்பதாகவும் தெரிவித்தார்.

கண்டியில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அன்னம் அல்லது யானை சின்னத்தில் போட்டியிடுவதில் உண்மையில் சிக்கல் காணப்படுமானால் வெறொரு சின்னத்தில் போட்டியிட முடியும். அதில் எந்த முரண்பாடும் இல்லை. வேறு சின்னத்தில் போட்டியிடக் கோருவது சாதாரண கோரிக்கையே ஆகும்.

ஆனால் இதனை வைத்து முரண்பாடுகளை தோற்றுவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஐக்கிய மக்கள் சக்தியை சிதைக்கும் முயற்சிகளே முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறிருப்பினும் தற்போது சின்னம் முக்கிய விடயமல்ல. மாறாக ஒற்றுமையே அத்தியாவசியமாகிறது. இதனையே கிராமப்புற மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் அனைவரும் ஒன்றிணைந்து பொதுத் தேர்தலில் அரசாங்கத்தை தோல்வியடைச் செய்ய வேண்டும். இதுவே எமது இலக்காகும்.

எனவே சின்னத்தை விட இலக்கு முக்கியமானதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## ஆலயத்தில்...

காலை இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டது.

குறித்த ஆலயத்திற்கு துவிச்சக்கரவண்டியில் வந்த இருவர் (ஆணும் பெண்ணும்) திருட்டில் ஈடுபட்டமை அருகில் இருந்த சிசிரிவியில் தெளிவாகத் தெரிய வந்தது. (இ-3)

## பெண்களுக்கு...

யோகங்கள் மற்றும் 52 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதில் 78 பாலியல் வன்புணர்வுகள், 21 கடுமையான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் 34 தொடர்பில் விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் அரசாங்கம் பாலியல் குற்றங்களுக்கான தண்டனைகளை வழங்குகின்றபோதும் குற்றங்களின் எண் ணிக்கை அதிகரித்து செல்வதாக மன்னிப்பு சபை கவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இதனைவிட அதிகமாக இடம்பெறுகின்றபோதும் அவற்றில் பெரும்பாலானவை தொடர்பில் முறையிடப்படுவதில்லை என்றும் மன்னிப்பு சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ-3)

## இணைந்து...

முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்தாலோசித்தே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் இணைந்து கொண்டார்.

கூட்டணியில் முக்கிய பங்கை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வகிக்கின்றது. கூட்டணியில் இணைந்துக் கொண்டதன் பின்னரும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் ஒருசிலர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராகக் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

இவ்வாறான கருத்துக்கள் அவர்களின் தனிப்பட்ட தீர்மானமாக காணப்பட்டாலும். கூட்டணிக்கு அவை ஒரு கட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## தேர்தலுக்கு முன்...

கடந்த 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து விபரங்களை பொது வெளியில் தெரியப்படுத்த முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்த இந் நிறுவனம் இம்முறை பொதுத் தேர்தலுக்கு முன்னர் வேட்பாளர்கள் தங்களது சொத்து விபரங்களை வெளியிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## சஜித் பிரேமதாஸ...

விஜேயவர்த்தன தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர், கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவினால் யாருக்கும் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை என் றும் தெரிவித்தார்.

எமது கட்சியின் சில உறுப்பினர்கள், குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்கள். அதாவது, கட்சியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு ராஜபக்ஷவினரின் சதித்திட்டமே காரணம் என்று கூறியிருந்தார்கள்.

ஆனால், உண்மையில் ராஜபக்ஷக்களுடன் தொடர்பை வைத்துக்கொள்ள வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. எமக்கும் இந்த அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்பதுதான் ஒரே நோக்கமாகும்.

ஒரே கட்சிக்குள் பிளவுபட்டுக் கொண்டு எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ள முடியாது. இந்தப் பிளவினால், எமக்கோ அல்லது மக்களுக்கோ எந்தவொரு நன்மையும் கிடையாது என்பதுதான் உண்மையாகும். மாறாக, ராஜபக்ஷக்களுக்குத் தான் இதனால் நன்மை ஏற்படும்.

சஜித் பிரேமதாஸவுக்கோ அவரது தரப்பினருக்கோ நாம் என்றும் எதிரானவர்கள் கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சியின் கதவு இன்னும் இவர்களுக்காகத் திறந்துதான் காணப்படுகிறது.

'எனவே, வேட்புமனுத் தாக்கல் செய்யும் முன்னர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## பொக்கற் ராஜா...

மற்றும் வீதிகளில் நகை பறிப்பு போன்ற சம்பவங்களுடன் தொடர்புபட்டு நீண்ட காலமாக தேடப்பட்டு வந்த நிலையில் சந்தேகநபர் நேற்றுக்காலை யாழ். பொம்மை வெளிப்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த 24 வயதுடைய பொக்கற் ராஜா எனப்படும் நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

திருடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 5 தொலைபேசிகள் மற்றும் தங்கச்சங்கிலி என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட நபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (இ-3)

## அரசியலிலிருந்து...

விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அரசியல் இன்று அநாகரிகமானதாக, ஊழல் மற்றும் வன்முறை நிறைந்ததாக இருப்பதற்கு ஒரே காரணம் அரசியலில் முற்று முழுதாக ஆண் ஆதிக்கம் இருப்பதே.

பெண்களின் சமபங்களிப்பு அரசியலில் இருக்குமானால் இன்று அரசியலின் முகம் வித்தியாசமானதாக விரும்பத்தக்கதாக இருந்திருக்கும். வன்முறை அற்று இருந்திருக்கும். ஊழல் குறைந்ததாக இருக்கும். சமூகத்தில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமாக உள்ள பெண்கள் மிக இலகுவாக அரசியலில் சம உரிமையைப் பெற முடியும். பெண்கள் அரசியலில் தான் இலகுவாக சமவுரிமை பெற முடியும்.

பெண்களின் கைகளில் தான் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்கு உள்ளது. ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைக் கொண்டுள்ள பெண்கள் ஒன்று சேர்ந்தால் அரசியலில் 100 சதவீதம் பெண்கள் பிரதிநிதித்துவத்தை உருவாக்க முடியும். ஆண்களை முழுமையாக அரசியலில் இருந்து அகற்றும் வல்லமையும் பெண்களிடம் உள்ளது என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (இ-30)

நீரோகா
திகதி 2020/03/08
சீட்டிழுப்பு இலக்கம் 0672
லக்கினம்: மிதுனம் — வெற்றி இலக்கங்கள்: 06 10 12 19

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 08-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2415
ஆங்கில எழுத்து: E — வெற்றி இலக்கங்கள்: 24 46 53 60
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2020.03.08
சீட்டிழுப்பு இலக்கம் - 275
O 46 56 78 79

மஹஜன சம்பத
திகதி 2020/03/08
சீட்டிழுப்பு இலக்கம் 4130
W 7 6 3 5 2 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1140
சீட்டிழுப்பு திகதி 08.03.2020 ஞாயிற்றுக்கிழமை
C 40 61 69 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.99,321,584
6389

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 906
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.03.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,395,880/-
வெற்றி இலக்கங்கள்: 01 34 42 64 — A

சீட்டிழுப்பு வாரம்: 569
வர்ணம்: மஞ்சள்
திகதி: 08.03 2020 ஞாயிற்றுக்கிழமை
J 19 56 66 78
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,890,075

ராசி அதிர்ஷ்டம்
திகதி 08.03.2020 — வெற்றி வாரம் 2792 — வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள்: மகரம் 04 30 50 57
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,377,578

டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 5 3 4 3
ரூ.100 பரிசுக்குரிய 4 2 7
2020.03.09 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# கிழக்கில் இரண்டு “கொரோனா” தடுப்பு நிலையங்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பாதித்த நாடுகளில் இருந்து வருபவர்களை தனிமைப் படுத்தி வைத்து கண்காணிப்பதற்காக மூன்று தடுப்பு நிலையங்களை அரசாங்கம் அமைத்துள்ளது.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம், கண்டகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையம், ஹெந்தல தொழுநோய் வைத்திய சாலை ஆகியனவே தடுப்பு நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் அதிகளவில் பாதித்த நாடுகளான இத்தாலி, தென்கொரியா, ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து வருபவர்கள், இன்று தொடக்கம் மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக தடுப்பு முகாமுக்கு அனுப்பப்படுவர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜயசிங்க தெரிவித்தார். ஹெந்தல தொழு நோய் மருத்துவ மனையின் மூன்று கட்டடங்களை தடுப்பு முகாமாகப் பயன்படுத்தும், முடிவுக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களை அடுத்து, மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் மற்றும் கண்டகாடு புனர்வாழ்வு நிலையம் ஆகியவற்றை தடுப்பு நிலையங்களாக அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

பலவேலை ஆள்தேவை

கச்சேரி நல்லூரில் அமைந்துள்ள பாணன்குளம் நாச்சியம்பாள் தேவஸ்தானத்திற்கு நிரந்தரமான, நல்லூர் சுற்றாடலில் வசிக்கும் ஒருவர் உடனடியாக தேவை. (2042)

தொடர்பு தொலைபேசி இலக்கம் : 077 295 1097

IELTS
Academic Life skills
British college
of higher studies
0212224550 / 0761380212
Sirampiyady lane,
Stanley road, Jaffna (C-9409)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550*/= Kg
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS (C-8785)

FLC FRENCH LANGUAGE CENTRE

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan (Trained in France) (C-9389)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 14.03.20 சனி 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 ஆரம்பம் :16.03.20 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9381)

கனேடிய சுற்றுலா விருந்தோம்பல் கற்கை நிலையம்

Hotel Management
ஆரம்பம்: இன்று 09.03.2020
100% வேலைவாய்ப்பு
வெளிநாட்டில உயர் கல்வி
ஸ்கில் மைகிரேசன் வாய்ப்பு
0213146171, 0760579999
No.1544, K.K.S Road, Jaffna. (C-9451)
CTHI

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536 (C-9444)

# அந்தியேட்டி அழைப்பு



கடந்த 08.02.2020 சனிக்கிழமை சிவபதமெய்திய
எமது அன்புத் தெய்வம்

## அமரர் வேலுப்பிள்ளை வாசேஸ்பதிராஜா

(Jaffna Radio Electricals - யாழ்ப்பாணம்)



அன்பின் உறைவிடமே
அரவணைப்பின் இருப்பிடமே
ஆதரவு தந்து எமை வளர்த்தீர்
ஆறுதலாய் இருந்திருந்தோம் நாம்
இன்று பிரிவால் துடித்து போனோம் அப்பா...

எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரிகைகள் இன்று (09.03.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல. 27, லோட்டஸ் வீதி (தாமரை வீதி),
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (2541)

குடும்பத்தினர் : மகன் - வா.கணேஸ்வரன் - 077 666 9987
வா.லோகேஸ்வரன் - 077 959 0065

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.